T.2641

# மனம் எனும் மாயக் குரங்கு

(மனத் தத்துவ நூல்)

பெ. தூரன்

அமுத நிலையம் லிமிடெட்.
தேனும்பேட்டை, சென்னை-18
போன் : 88574 த. பெ. 1457

உரிமை பதிவு
அமுதம்—77
முதற் பதிப்பு : டிசம்பர், 1953

விலை 0 15 0

## பொருள் அடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | மனம் எனும் மாயம் | 1 |
| 2. | மனமே பொய்யா? | 7 |
| 3. | மாயக் குரங்கு | 12 |
| 4. | மறை மனம் | 16 |
| 5. | மாறுபட்ட கருத்துக்கள் | 21 |
| 6. | மூன்று பிரிவுகள் | 25 |
| 7. | ஞாபகமும் கற்பனையும் | 27 |
| 8. | க ன வு | 32 |
| 9. | கனவும் மனமும் | 38 |
| 10. | கனவின் பொருள் | 43 |
| 11. | பகற் கனவு | 51 |
| 12. | கிலி | 56 |
| 13. | கற்றுக் கொடுத்தது யார்? | 61 |
| 14. | உள்ளக் கிளர்ச்சி | 65 |
| 15. | ஓட்டம் முதலிலா, பயம் முதலிலா? | 70 |
| 16. | நமக்குப் பெருமை | 74 |

நாஷனல் ஆர்ட் பிரஸ்,
தேனாம்பேட்டை, சென்னை-18

# மனம் எனும் மாயக் குரங்கு

## 1. மனமெனும் மாயம்

மனம் என்பதென்ன? அது எங்கே இருக்கிறது? கை, கால், கண், இருதயம் என்றால் உடம்பில் உள்ள உறுப்புக்கள் என்று உடனே தெரிகிறது. அவைகளுக்கு வடிவம் உண்டு. பருமன் உண்டு. ஆதலால் அவைகளை எளிதில் அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் மனம் என்பது எது? அதற்கு வடிவம் உண்டா? பருமன் உண்டா? தொட்டுப் பார்த்து அறிந்துகொள்ள முடியுமா? இவ்வாறு யோசித்துப் பார்த்தால் ஒன்றும் விளங்குவதில்லை. இவ்வாறு யோசனை செய்வதற்கு அந்த மனமே காரணமாக இருக்கிறதென்று தோன்றுகிறது. ஆனால் அது என்ன என்று மட்டும் சுலபமாக அறிந்துகொள்ள முடிகிறதில்லை. மனத்திற்கு உருவமில்லை; கன பரிமாணமும் இல்லை. மனம் என்பது தசை, நரம்பு முதலியவைகளால் ஆக்கப்பட்டதல்ல. அது ஸ்தூல வஸ்து அல்ல; அது சூக்குமப் பொருள். ஸ்தூலப் பொருள் என்றால் அது உடம்பைச் சேர்ந்த ஓர் உறுப்பாகிவிடும்; எளிதாக அதை அறிந்துகொள்ளவும் முடியும்.

சிலர் மூளைதான் மனம் என்று தவறாகக் கருதுகிறார்கள். மூளை என்பது உடம்போடு சேர்ந்த ஒரு ஸ்தூலப் பொருளான உறுப்பு. அது மனம் அல்ல.

சூக்குமப் பொருளாக மனம் இருக்கிறதென்று மட்டும் நமக்குப் புலனாகிறது. அந்த மனந்தான் ஆசைகள், எண்ணங்கள், நோக்கங்கள், நம்பிக்கைகள் முதலியவற்றிற்கு இடமாயிருக்கிறதென்று தெரிகிறது. அம் மனத்திற்கும் உடம்பிற்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறதென்றும் தெரிகிறது. மனம் உடம்பைப் பாதிக்கின்றது; உடம்பு மனத்தைப் பாதிக்கின்றது. பயம் ஏற்படும்போது உடல் நடுங்குகிறது; கோபம் வரும்போது முகம் சிவக்கிறது; துக்கமுண்டாகும்போது கண்ணீர் வருகிறது. பயம், கோபம், துக்கம் முதலிய உணர்ச்சிகள் மனத்தில் உண்டாகின்றன. அவற்றால் உடல் பாதிக்கப்படுவதை நாம் காண்கிறோம். குடிவெறியனுடைய கண்ணிலே மாட்டிற்கு நான்கு கொம்புகள் இருப்பதாகத் தோன்றுகின்றன. கஞ்சாக் குடித்தவனுக்குப் புது உலகமே தோன்றுகிறது. இரவிலே வயிறு புடைக்கத் தின்றவனுக்குப் பலவிதமான கனவுகள் தோன்றுகின்றன. இவைகளெல்லாம் உடல் மனத்தைப் பாதிப்பதற்குச் சான்றுகள்.

இங்கே ஒரு சந்தேகம் தோன்றலாம். சூக்குமமான ஒன்று ஸ்தூலப் பொருளை எவ்வாறு பாதிக்கமுடியும் என்ற கேள்வி பிறக்கலாம். கோடரி பாய்ந்தால் மரம் வெட்டுப்படுகிறது. ஒரு பருப் பொருள் மற்றொரு பருப் பொருளைப் பாதிக்கின்றது. இதை அறிந்து கொள்வது எளிது. ஆனால் மனம் எப்படி உடம்பைப் பாதிக்கிறது என்பதுதான் விளங்குவதில்லை.

மனத்தைப்பற்றி அறிந்துகொள்ள இரு வழிகள் சொல்லப்படுகின்றன. ஒன்று சிந்தனை செய்து பார்த்தல்; மற்றொன்று கவனித்தல். நடத்தையைப் பிரதானமாகக் கொண்டு மனத்தைப்பற்றி அறிந்துகொள்ள முயலும் ஒரு சாரார் இருக்கின்றனர். அவர்களுக்கு நடத்தைக் கொள்கையர் (Behaviourists) என்று பெயர். அவர்கள் மேலே கூறிய முதல் வழியைத் தவறானதென்று கண்டிக்கிறார்கள்.

மனந்தான் சிந்தனை செய்ய உதவுகிறது என்று சொல்லுகிறோம். அவ்வாறிருக்க அதைக்கொண்டே அதைப் பற்றி எப்படிச் சிந்திப்பது? மனத்தைப் பற்றி அறிய மனத்தையே கருவியாக உபயோகிக்கும்போது தவறுகள் நேர்கின்றன. யார் எதை மனத்தில் கொண்டு நோக்குகிறார்களோ அதுதான் அவர்களுக்குத் தோன்றுகிறது. தெருவிலே செருப்புத் தைக்கிறவன் உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு நாட்டமெல்லாம் செருப்பின்மேலேதான். தெருவிலே செல்லுகிறவர்களுடைய செருப்புப் பழுதுபட்டிருந்தால் அதுதான் அவன் கண்ணில் படுகிறது; அவர்களுடைய முகம் அவனுக்கு அவ்வளவாகத் தெரிவதில்லை. ஒரு ஓவியன் காட்டு வழியிலே செல்லுகிறான். அவனுக்கு எத்தனையோ அழகிய நிற வேற்றுமைகள் தென்படுகின்றன. விலங்குகளை வேட்டையாடுவதற்காக மலைக்காட்டில் புகுந்தவன் கண்ணில் அத்தனை இயற்கை எழிலும் படுவதில்லை; கறையான் புற்றுகளும் புதர்களும் மான் போலவும், மற்ற விலங்குகள் போலவும் தெரிகின்றன.

ஒரு மனத் தத்துவர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். வகுப்பிலுள்ள மாணவர்களில் ஒருவன் திடீரென்று எழுந்து கோபமாக ஏதோ வார்த்தை சொன்னான். சுழல் துப்பாக்கியை எடுத்து ஆசிரியரைப் பயமுறுத்தினான். எல்லோரும் திகைத்துப் போனார்கள். ஆனால் அருகிலிருந்த இரு மாணவர்கள் அவன்மேல் பாய்ந்து துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டு அவனை வெளியேற்றினார்கள். ஒழுங்கீனமாக நடந்து கொண்ட அம் மாணவன் மீது வழக்குத் தொடர வேண்டுமென்று மனத் தத்துவர் மற்ற மாணவர்கள் அனைவரையும் தாங்கள் கண்ட சம்பவத்தைப் பற்றித் தனித் தனியாக உள்ளதுள்ளவாறு எழுதித் தருமாறு கேட்டுக் கொண்டார். அப்படி அவர்கள் எழுதிக் கொடுத்தவற்றையெல்லாம் ஆராய்ந்தபோது முக்கியமான செய்கைகளைப் பற்றியே

மாறுபட்ட குறிப்புக்கள் காணப்பட்டன. அவர்கள் எழுதினவெல்லாம் ஒரேமாதிரி இருக்கவில்லை. மேலே குறித்த சம்பவம் ஓர் ஆராய்ச்சிக்காகவே நடிக்கப்பட்டது. ஆசிரியருக்கும் மூன்று மாணவர்களுக்கும் தவிர மற்றவர்களுக்கு அது வெறும் நடிப்பு என்று தெரியாது. இயல்புக்குத் தக்கவாறு வெவ்வேறு அம்சங்களே மனத்தில் பதிகின்றன என்பதை மெய்ப்பிக்க இந்தச் சோதனையை அவர்கள் செய்தார்கள்.

இவற்றிலிருந்து மனத்தைக் கொண்டு அதைப் பற்றியே சிந்தித்துப் பார்ப்பதென்பது சரியல்லவென்று ஏற்படுகிறது. கையைப்பற்றி அறிய மனம் உதவலாம்; வேறு உறுப்புக்களைப்பற்றி அறிந்துகொள்ள மனம் உதவலாம்; ஆனால் அது தன்னைப் பற்றியே அறிந்து கொள்ளச் சரியான கருவியாகுமா?

அதனால் இம்முறை சரியானதல்லவென்று நடத்தைக் கொள்கையர் ஒதுக்குகிறார்கள். மனம் எவ்வாறு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடந்து கொள்கிறது என்பதைக் கவனித்து அதன் மூலமாக மனத்தைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். அதற்காக அவர்கள் மிகப் பல சோதனைகள் செய்திருக்கிறார்கள். ஏதாவது ஒரு நிலைமையை ஏற்படுத்தினால் அந்த நிலைமைக்குத் தக்கவாறு உயிர்ப் பிராணிகளிடத்து ஒருவகையான செயல் நிகழ்கின்றது என்றும் அந்நிகழ்ச்சிக்கு மனம் என்பதொன்று காரணமாக இருக்கவேண்டியதில்லை என்றும் அவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளின் மூலம் கூறுகிறார்கள். அவர்கள் செய்த சுவையான சோதனை ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன்.

உணவைக் கண்டதும் வாயில் நீர் சுரப்பது சாதாரணமான ஒரு செயல். ஒரு நாயின் முன்னால் உணவை வைக்கும்போதெல்லாம் மணியோசை கேட்கும்படியாகப் பல நாட்கள் தொடர்ந்து செய்தார்கள். உணவைக் கண்ட

போதெல்லாம் நாயின் வாயில் நீர் சுரந்து கொண்டிருந்தது. பின்பு ஒருநாள் உணவைக் கொண்டு வராமலேயே மணி யோசை மட்டும் கேட்கும்படி செய்தார்கள். அப்பொழுதும் அந்நாயின் வாயில் நீர் சுரக்கலாயிற்று. உணவைக் காணும் பொழுதே மணியோசையைப் பலமுறை அந்நாய் கேட்டி ருக்கிறது. அவை இரண்டும் ஒருங்கு தோன்றிய காலத்தில் நிகழ்ந்த வாயில் நீர்சுரக்கும் செயலானது மணியோசையை மட்டும் கேட்டவுடன் உண்டாகத் தொடங்கியது. உண வைக் கண்டதாலும், மணியோசையைக் கேட்டதாலும் ஏற்பட்ட உணர்ச்சிகள் நரம்புகளின் வழியே மூளைக்குச் செல்கின்றன. அவற்றின் பயனாக அங்கிருந்து ஒருவகை உணர்ச்சி தோன்றிச் செயல் நரம்பின் வழியாக வாய்க்குச் சென்று நீர் சுரக்கும்படி செய்கின்றது. இம்மாதிரியாகக் கண் பார்வைக்கும் செவி உணர்விற்கும் வாயில் நீர் சுரப் பதற்கும் இடையே மாறாத ஒரு தொடர்பு ஏற்பட்டு விடுகிறது. அதனால் மணியோசை மட்டும் கேட்கிற காலத் திலும் வாயில் நீர் சுரக்கத் தொடங்குகிறது. இந் நிகழ்ச் சிக்குக் காரணமாக மனம் என்பதொன்று இருக்க வேண் டியதில்லை என்று நடத்தைக் கொள்கையர் சொல்லுகிறார் கள். எந்திரத்திலே ஏதாவது ஒரு விசைக் கருவியை அழுத் தினால் அதன் பயனாக உடனே ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி யுண்டாவதுபோல உயிர்ப் பிராணிகளிடத்தும் ஒரு குறிப் பிட்ட நிலைமையில் ஒரு குறிப்பிட்ட செயல் நிகழ்கின்றது என்பது அவர்கள் வாதம். சாதாரண எந்திரத்தின் தன்மையை எளிதாக அறிந்துகொள்ள முடியும். மனித எந்திரம் அதிகச் சிக்கல்களும் நுண்மையும் வாய்ந்ததாகை யால் அதன் தன்மையை அவ்வளவு எளிதாக அறிந்து கொள்ள முடிவதில்லை. இதுதான் இரண்டிற்குமுள்ள வேறுபாடு என்கிறார்கள் அவர்கள்.

வாழ்க்கையிலே பல விஷயங்களைப் பற்றி நாம் யோசனை செய்கிறோம். யோசனை செய்து முடிவுக்கு வந்த

பிறகுதான் எந்தக் காரியத்தையும் செய்யவேண்டும் என் கிறோம். மனம் என்பதொன்றில்லாவிட்டால் எவ்வாறு யோசனை செய்யமுடியும் என்று சந்தேகம் உண்டாகலாம். அதற்கும் நடத்தைக் கொள்கையர் சமாதானம் கூறுகிறார் கள். வார்த்தைகளில்லாமல் சிந்திப்பதென்பது இயலாத காரியம். நாம் சிந்திக்கிறோமென்றால் வார்த்தைகளின் மூலமாகத்தான் செய்கிறோம். பேசும்போது வார்த்தைகளை உச்சரிக்கிறோம். எண்ணும்போது வார்த்தைகளை உச்சரிப் பதில்லை. இருந்தாலும் அவ்வார்த்தைகள் குரல்வளையி லுள்ள பல தசை நார்களின் நுட்பமான அசைவுகளினால் உருவாகின்றன. ஆதலால் எண்ணுவதென்பதெல்லாம் உச்சரிக்கப்படாத பேச்சுத்தான் என்றும், அதற்கு மனம் தேவையில்லை என்றும் நடத்தைக் கொள்கையர் சாதிக் கிறார்கள்.

அவர்கள் கூற்றை ஒப்புக்கொண்டு மனம் என்ப தொன்றில்லை என்று முடிவு கட்டிவிடலாமா என்றால் அதிலும் பல சந்தேகங்கள் தோன்றுகின்றன. அவற்றைப் பற்றி அடுத்த பகுதியில் ஆராய்வோம்.

# 2. மனமே பொய்யா?

நுணுகி ஆராய்கின்றபோதுதான் பல ஐயங்கள் பிறக்கின்றன. மேற்போக்காகப் பார்க்கின்றபோது எளிதாகத் தோன்றியவை ஆழ்ந்து நோக்கும்போது மயக்கத்தைத் தருகின்றன; பலவகையான முரண்பட்ட கருத்துக்களுக்குக் காரணமாகின்றன. மனத்தைப் பற்றிய ஆராய்ச்சியிலும் இதே தொல்லைதான். மனம் என்பது என்ன என்று ஆராயப் புகுந்த சிலர் மனம் என்பதே இல்லை என்று முடிவு கட்டியுள்ளார்கள். இவர்கள் கூறுவதை ஒத்துக்கொள்ள முடியாது என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

நடத்தைக் கொள்கையர் கூறுவதுபோலப் புலன்களின் வழியாக மூளைக்குச் சென்ற புலன் உணர்வு (Sensation) களுக்குத் தக்கவாறு செயல் நிகழ்கின்றதென்றும் அச்செயலுக்குக் காரணமாக மனம் என்பதொன்று அவசியமில்லை என்றும் கொள்வதிலேயும் பல சந்தேகங்கள் கிளம்புகின்றன. புலனுணர்வானது நரம்புகளின் வழியே மூளைக்குச் செல்கின்றது; அதற்குப் பொருத்தமான செயலுணர்வு வேறு சில நரம்புகளின் வழியாக உறுப்புக்களுக்குச் செல்கின்றது. புலன் உணர்வைக் கொண்டு செல்லும் நரம்புகளுக்கும் செயல் உணர்வைக் கொண்டு செல்லும் நரம்புகளுக்குமிடையே தொடர்பை மூளையானது எந்திரம் போல உண்டாக்குகிறது என்று சொல்லும்போது எல்லாம் சுலபமாகத்தான் காண்கிறது. இந்தக் காரியத்திற்கு மனமே தேவையில்லை யென்றும் தோன்றுகிறது. ஆனால், விஷயம் அவ்வளவு சுலபமானதல்ல. மனத்தை அவ்வளவு எளிதாகத் தீர்த்துக் கட்டிவிட முடியாது. புலன் உணர்வால்

மட்டும் செயல் நிகழ்கிறதென்றால் புலனுணர்விற்குக் காரணமாக ஏதாவதொன்று முன்னாலிருக்க வேண்டும். எதிர்காலத்திலே தோன்றக்கூடிய ஒரு விஷயம் இன்று புலன் உணர்விற்குக் காரணமாக இருக்கமுடியாது. எதிரிலே ஒரு பழம் இருந்தால் அதைப் பற்றிய உணர்வு கண்களின் வழியாக மூளைக்குச் செல்லும். மூளையின் செய்கையால் அப்பழத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற செயல்உணர்வு கைகளுக்கு வரும். அதனால், பழத்தை எடுத்துக் கொள்ளும் செயல் நிகழும். மெய்தான். ஆனால் பழம் எதிரிலே இல்லாவிட்டால் அந்தச் செயல் நிகழ முடியாது.

உயிர்ப் பிராணிகள் இம்மாதிரியான புலன் உணர்வின் விளைவாகவே செயல் புரிகிறதில்லை. பின்னால் ஏற்படப் போகும் ஒரு நிலைமையை உத்தேசித்தும் அவைகள் காரியம் செய்கின்றன. இனப் பெருக்கத்தை எடுத்துக் கொள்வோம். முட்டை இடுவதற்குப் பல நாட்களுக்கு முன்பே காக்கைகள் கூடு கட்ட ஆரம்பிக்கின்றன. குயில்கள் கூடு கட்டாவிடினும், தாமிட்ட முட்டைகளைத் தந்திரமாகக் காக்கைக் கூடுகளிலே வைக்கின்றன. இம்மாதிரி செய்கைகள் எல்லாம் புலன் உணர்வால் ஏற்பட்டவையல்ல. இவை இயல்பூக்கமாகச் செய்தவையாகும்.

எதிர்காலத்தில் விளைவனவற்றை எண்ணிப் பார்த்து மனிதன் பல காரியங்களைச் செய்கிறான். அவன் பல நூல்களைக் கற்றுத் தேர்ந்து பட்டம் பெற முயல்கிறான். அப்படிப் பட்டம் பெறுவதால் விளையப் போகும் நன்மையை உத்தேசித்தே அவன் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளுகிறான். பின்னால் வரப்போவதை முன்னாலேயே எதிர்பார்க்கும் தன்மையானது புலன் உணர்வால் ஏற்படும் செயலாகாது. அவ்வாறு எதிர்பார்க்கக் கூடிய திறமைக்கு மனமே காரணமாக இருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது.

இனிமேல் வரப்போவதை எதிர்பார்த்துக் காரியம் செய்வது போலவே இறந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை ஞாபகத்தில் கொண்டு காரியம் செய்வதும் மனத்தின் தன்மையாகும். மனம் என்பதொன்றில்லாவிட்டால் ஞாபக சக்தி எவ்வாறு உண்டாகிறதென்பதை எளிதாக விளக்க முடியாது. நடத்தைக் கொள்கையர் அதற்கும் ஒரு வகையான விளக்கம் கூறுகிறார்கள். ஆனால் அது முற்றிலும் பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

திடீரென்று ஒரு புலி எதிர்ப்பட்டால் பயமெனும் உள்ளக் கிளர்ச்சி (Emotion) உண்டாகிறது. அந்த உள்ளக் கிளர்ச்சிக்கு எதிரே தோன்றும் புலியே காரணம். நடத்தைக் கொள்கையர் கொள்கைப்படி மனமென்பதொன்றில்லாமலேயே இதை நாம் புரிந்துகொள்ளலாம். ஆனால் பயக் கிளர்ச்சிக்குக் காரணமாக எதிரிலே ஒன்றுமில்லாத போதும் பல சமயங்களில் பயம் உண்டாகிறது. சிறந்த பண்டிதர்கள் அடங்கிய சபையிலே அடுத்த வாரம் நான் பேச ஏற்பாடாகிறது என்று வைத்துக்கொள்வோம்; எனக்கு இப்பொழுதே பயம் உண்டாகிறது. கவலை பிறக்கிறது. அந்தச் சபையிலே பண்டிதர்களில்லாமல் இளம் மாணவர்கள் மட்டும் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். எனக்குப் பயக் கிளர்ச்சியே தோன்றுவதில்லை. மகிழ்ச்சியே பிறக்கிறது. பின்னால் வரப்போகும் இந்த நிலைமை இப்பொழுதே எனக்குப் பயத்தையோ மகிழ்ச்சியையோ அளிக்கின்றது. மனம் என்பதொன்றில்லாவிட்டால் இது சாத்தியமாகாதென்று நிச்சயமாகக் கூறலாம்.

மெக்டூகல் (McDougall) என்ற மனத் தத்துவர் மனம் என்பதொன்றுண்டு என்பதை விளக்க ஒரு அழகான உதாரணம் காட்டுகிறார்: ஒருவருக்கு, 'உமது மகன் இறந்து விட்டான்' என்று தந்தி வருகிறது. உடனே,

அவர் மூர்ச்சித்து விழுகிறார். பிறகு ஒருவாறு சுய உணர்வு பெற்று எழுந்திருந்தாலும் அவருடைய பிற்கால வாழ்க்கையே மாறுபட்டு விடுகிறது. ஆனால் அதே சமயத்தில் அருகிலிருந்து அந்தத் தந்தியைப் படித்த மற்றொருவருக்கு இவ்வித மாறுதல்கள் ஏற்படுவதில்லை. முன்னவரிடம் சிறிது அனுதாபம் காட்டுவதோடு அவர் உள்ளக் கிளர்ச்சி நின்றுவிடுகிறது. ஒரே தந்தி வேறுவேறான உள்ளக் கிளர்ச்சிகளுக்குக் காரணமாக இருக்க வேண்டுமானால் அத் தந்தியில் கண்டுள்ள சொற்களின் பொருளை வேறு வேறாக அறிந்துகொள்ளக் கூடிய ஒரு சக்தி இருக்க வேண்டும். அந்தச் சக்திக்கு நிலைக்களனாக இருப்பதுதான் மனம்.

எதிரிலே ஒரு திரையும் பல வர்ணங்களும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவைகள் ஒரு வகையான உணர்ச்சியை நமக்குத் தருகின்றன. ஆனால் திரையிலே வர்ணங்களை ஏற்றவாறு தீட்டிவிட்ட பிறகு வர்ணங்கள் என்றும் திரை என்றும் தனித்தனி உணர்ச்சி மறைந்து ஒரு அழகிய நங்கையின் உருவம் தென்படுகிறது. அவளுடைய உணர்ச்சிகளும் தோன்றுகின்றன.

முன்பு கண்ட வர்ணங்களே அந்த ஓவியத்தில் இருக்கின்றன. இவ்வாறு வர்ணங்களை ஒழுங்கு சேர்த்து ஒரே பொருளாகப் பார்க்கும் சக்தி நமக்கிருக்கின்றது. அந்தச் சக்தியைப் பற்றி எண்ணும் காலத்தில் மனம் என்பதொன்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

மேலே கூறியவற்றிலிருந்து உடலும் மூளையும் அல்லாமல் சூக்குமமாக மனம் ஒன்று இருக்கின்றதென்று தெளிவாகும். மூளைக்கும் மனத்திற்கும் நெருங்கிய தொடர்பிருந்தாலும் மூளை வேறு ; மனம் வேறு. மூளைக்கு அடங்காமல் வேலை செய்வது மனம். விமானத்தின் சாரதி எவ்வாறு அதன் எந்திரங்களைத் தன்னிஷ்டப்படி இயக்குவானோ அதுபோலவே உடலிலுள்ள உறுப்புக்களைப் பெரியதோர்

அளவிற்கு மனம் இயக்குகின்றது. மனம் வேகம் நிறைந்தது; ஒன்றாக இணைத்து நோக்க வல்லது; எதிரே உள்ள நிலைமையால் ஏற்பட்ட உணர்விற்கேற்பச் செயல் புரிவதோடு எதிர்காலத்தையும் மறைந்த காலத்தையும் எண்ணிச் செயல் புரியக் கூடியது. மனம் கற்பனை செய்யும் ஆற்றலும் வாய்ந்தது. இம்மனமே மனிதனுக்குத் தனிச் சிறப்பை அளிக்கின்றது.

# 3. மாயக் குரங்கு

மனம் ரொம்பப் பொல்லாதது என்பதற்கு ஒரு உதாரணம் காட்டுகிறேன். ஒருவனுக்கு ஏதாவது ஒன்றின் மேல் விருப்பமிருக்கும். ஆனால் அவன் அந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதைப் பிறர் உணர்ந்தால் அவனைப் பற்றிக் குறைவாக எண்ணுவார்கள். இது அவனுக்குத் தெரியும். இருந்தாலும் அந்த ஆசை மட்டும் விடாது. அந்த நிலையிலே அவன் தன்னை அறியாமலேயே தனது செய்கையை மற்றவர்கள் ஆமோதிக்க வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏதாவது ஒரு காரணம் கற்பிக்கத் தொடங்குவான். அவனுடைய மனம் இந்த வேலையைச் செய்கிறது. அவன் தெரிந்தே காரணம் கண்டு பிடிக்கலாம். அல்லது அவனறியாமலேயே இந்தக் காரணம் கண்டு பிடிக்கும் வேலை நடக்கும். அவனுக்கே இந்த ரகசியம் தெரியாது. மனம் தந்திரமாக இதைச் செய்துவிடும். அவனும் அது சரியான காரணந்தான் என்றும் அதனாலேயே அக்காரியத்தைச் செய்வதாகவும் நிச்சயமாக நம்புவான்.

ஒரு குடிகாரனை எனக்குத் தெரியும். அவன் கள்ளைக் குடிப்பதற்குக் காரணமாகத் தனக்குள்ள ஒரு நோயைப் பற்றிக் கூறுவான். கள்ளைக் குடிக்காவிட்டால் வயிற்று வலி நீங்குவதில்லையாம். எத்தனையோ மருந்துகளையெல்லாம் சாப்பிட்டுப் பார்த்தும் இந்த நோய் குணமடையவில்லை. கடைசியில் இந்த மருந்துதான் குணம் கொடுக்கிறதாம். கள்ளைக் குடித்துக் கொண்டிருந்தால் வயிற்றுவலியே அவனுக்கு வருவதில்லை.

கள்ளைக் குடிப்பதால் தனக்குச் சமூகத்தில் தாழ்வு ஏற்படும் என்று அவன் அறிந்திருக்கிறான். இருந்தாலும்

அந்த ஆசைமட்டும் அவனை விடுவதாகக் காணோம். அதனால் அவனுடைய மனம் இந்தமாதிரி ஒரு காரணத்தை அவனறியாமலேயே கற்பித்துக் கொடுத்திருக்கிறது. அந்தக் காரணம் முற்றிலும் சரியென்று அவனே நம்புகிறான்.

இவ்வாறு நிகழ்வதில் அவன் தன் காரணத்தைச் சரியானதென்று நம்புவதோடு இன்னும் ஒரு ஆச்சரியமென்னவென்றால் உடல் நிலையும் பல சமயங்களில் அதற்கேற்றவாறு அமைந்து விடுகிறது. கள்ளைக் குடிக்காவிட்டால் வயிற்றுவலியே அவனுக்கு வந்து விடுகிறது!

ஒரு சங்கீத வித்வான் தனது கச்சேரிக்குக் கூட்டம் வராததற்குக் கீழ்வருமாறு காரணம் சொன்னார். "இன்றைக்குக் குதிரைப் பந்தயமல்லவா? அதனால் எல்லோரும் அங்கே போயிருப்பார்கள்" என்றார் அவர். உண்மையில் அவருடைய கச்சேரி மக்களுக்குப் பிடிக்கிறதில்லை என்கிற விஷயம் அவருக்குத் தெரியும். அதை மறைப்பதற்காக அவர் தெரிந்தே இந்தக் காரணத்தைக் கற்பித்திருக்கிறார்.

இம்மாதிரி அறிந்தோ அறியாமலோ காரணம் கற்பிக்கும் செயலுக்கு அறிவுப் பொருத்தந் தேடல் (Rationalisation) என்று பெயர். ஆனால் மேலே கூறியதுபோல அறிவுப் பொருத்தந்தேடல் என்பது அவ்வளவு எளிமையானது மல்ல. அது இன்னும் சிக்கலானது. மனத்திலே ஆழ்ந்து பதிந்து கிடக்கும் ஏதோ ஒரு உணர்ச்சியாலும் இது ஏற்படலாம். வீட்டின் உட்புறச் சுவரில் ஒட்டுவதற்காக ஒருத்தி சிறப்பு நிறக் காகிதம் வாங்க விரும்பியதை அவள் கணவன் ஆட்சேபித்தானும். "சிவப்பு நிறமான சுவர்க் காகிதம் கண்ணுக்குத் தொந்தரவு கொடுக்கிறது" என்று அவன் காரணம் கூறினான். அவன் கூறிய காரணத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தபோது அவன் சிவப்பு வர்ணத்தை வெறுத்ததற்கு உண்மையான காரணம் தெரிந்தது. சிறு வயதிலே அவன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது ஒருசமயம் தண்டனை பெறுவதற்

காகத் தலைமையாசிரியரின் அறைக்குச் செல்லவேண்டி யிருந்தது. அப்போது அந்த அறைக்குச் சிவப்பு நிறச் சுவர்க் காகிதம் ஒட்டி யிருந்தது. அந்த நிறம் அவன் சிறு வயதிலே பெற்ற தண்டனையின் வேதனை உணர்ச்சியை மேலெழுந்து தோன்றும்படி செய்வதே அவன் அதை வெறுப்பதற்கு உண்மையான காரணம் என்றும், கண்ணுக்குத் தொந்தரவு கொடுக்கின்றது என்பது அறிவுப் பொருத்தந்தேடல் என்றும் பிராய்டு என்ற மனத் தத்துவர் கூறுகிறார்.

இந்த உணர்ச்சி இதுவரையில் எங்கிருந்தது? அவனுக்கு இதைப்பற்றி நல்ல ஞாபகங்கூட இல்லையே? அவ்வாறிருக்க அந்த உணர்ச்சி எங்கே பதுங்கிக் கிடந்தது? இப்பொழுது அது எப்படி மேலே வந்தது? இவற்றையெல்லாம் தெரிந்து கொள்வதற்கு முதலில் மனத்தின் அமைப்பைப் பற்றி இன்னும் சற்று விரிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

அறிவுப் பொருத்தந் தேடுவதிலே மற்றொரு வகையுமுண்டு.

ராமு கணக்குப் பரீட்சையிலே வெற்றி பெறவில்லை. "ஏண்டா இப்படி ஆயிற்று?" என்று கேட்டால், "அது என் குற்றமல்ல. கணக்காசிரியர் சரியாகக் கற்றுக் கொடுக்கவில்லை" என்று அவன் பதில் சொல்லுகிறான். தான் சொல்லுவது சரியான காரணம் என்றுகூட அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்.

எனக்குத் தெரிந்த இளங் கவிஞர் ஒருவர் தமது பாடல்களைப் பத்திரிகையாசிரியர்கள் ஏற்றுக் கொள்ளாததற்கு அடிக்கடி ஒரு காரணம் சொல்லுவார். "இந்த ஆசிரியர்களுக்கு உண்மையான கவிதையை அறிந்து கொள்ளத் தெரியவே தெரியாது—எல்லோரும் ரசிகத் தன்மையே இல்லாதவர்கள்" என்று அவர் ஆத்திரத்தோடு பேசுவார்.

இவ்வாறு குற்றத்தைப் பிறர்மேல் ஏற்றிச் சொல்லுவதற்கு மனத் தத்துவத்திலே விட்சேபம் என்ற பெயர் வழங்குகிறது. விட்சேபத்திற்கும் அறிவுப் பொருத்தம் தேடலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பல சமயங்களிலே இரண்டையும் பிரித்துப் பார்ப்பதுகூடச் சிரமமாக இருக்கும்.

இந்த இரண்டு தன்மைகளுக்கும் அடிப்படையான காரணம் ஒன்றுதான். தன்னைப் பற்றிப் பிறர் இழிவாகக் கருதக்கூடாது என்ற எண்ணமே இங்கே வேலை செய்கிறது. மனத்தின் மாயச் செயல்களில் இதுவும் ஒன்று. ஆதலால் அந்த மனத்தைப்பற்றி இன்னும் சற்று விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அதன் மாயத்தைப் பற்றி ஓரளவு நன்கு புரிந்துகொள்ள முடியும். இதை அடுத்த பாகத்தில் கவனிப்போம்.

# 4. மறை மனம்

இரண்டடுக்கு மாடி வீடு ஒன்று. ஓரடுக்குத் தரை மட்டத்திலிருக்கிறது. மற்ருென்று தரை மட்டத்திற்குக் கீழே பூமிக்குள் மறைந்திருக்கிறது. மேலேயுள்ள மாடியில் வசிப்பவர்கள் பொதுவாக மரியாதையுள்ள பொறுக்கி எடுத்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். கீழ்ப்பாகத்திலே கூட்டம் அதிகம். அதிலுள்ளவர் அனைவரும் காட்டு மிராண்டிகள்; சுயநலக்காரர்கள்; தங்கள் சுகமே பெரிதென மதிப்பவர்கள்; பிறரைப் பற்றிய கவலையே இல்லாதவர்கள்; மானம் மரியாதை என்ற பேச்செல்லாம் அவர்களுக்கு அர்த்தமற்றது. ஆனல் அவர்கள் வலிமைக்கும் வேகத்திற்கும் பேர் போனவர்கள்; அவர்கள் திடீரென்று மேல் மாடிக்குள் நுழைந்து ஆதிக்கம் செலுத்த முயல்வார்கள்.

இப்படிப்பட்ட ஒரு வீட்டைப் போலத்தான் நமது மனம் இருக்கின்றதென்று சிக்மண்ட் பிராய்டு போன்ற மனத் தத்துவர்கள் கருதுகிருர்கள். மனத்தின் ஒரு பெரும் பகுதி மறைந்திருக்கிறதாம். அதில் பதுங்கிக் கொண்டிருக்கிற ஆசைகள், எண்ணங்கள், உணர்ச்சிகள் திடீரென்று மேலே கிளம்பி ஆர்ப்பாட்டம் செய்யுமாம். இவைகளெல்லாம் கட்டுக்கடங்காமல் மேல் வருவதைத் தடுப்பதற்குப் பாராக்காரனைப்போல் ஒரு சக்தி இருக்கிறதாம்.

மேலே சொன்னவாறு மறைந்திருக்கும் மனப் பகுதியைத்தான் மறை மனம், நனவிலி மனம் (Unconscious Mind) என்கிருர்கள். மறை மனம் என்பது தனியானதொன்று அல்ல என்பதை நாம் உணரவேண்டும். மனத்

தின் மறைந்து நிற்கும் பாகம்தான் அது. கடலின் விசால மான மேற்பரப்பை மனம் என்று சொன்னால் அப்பரப்பின் கீழ் ஆழ்ந்து மறைந்து நிற்கும் நீர்ப்பரப்பை மறைமனம் எனலாம். இரண்டும் வேறல்ல; ஒன்றேதான்.

கடலின் ஆழத்திலுள்ள தண்ணீர் சதா மேலே வந்து மேற்பரப்பின் உஷ்ணத்தை மாற்றுகிறது. அதுபோலவே மறைமனமும் நமது எண்ணம், செய்கை முதலியவைகளை மாற்ற முயலுகிறது.

மறைமன ஆராய்ச்சியைக் கொண்டு ஒருவனுடைய நடத்தைக்குக் காரணம் கண்டு பிடிக்கிறார்கள். குழந்தைப் பருவத்தில் அடக்கி வைக்கப்பட்ட பல ஆசைகளும் உணர்ச்சிகளும் மறை மனத்தில் பதிந்து பிற்காலத்தில் பல வகையான செய்கைகளுக்குக் காரணமாகின்றன. அவை களே ஒருவனுடைய தன்மையையும் அமைக்கின்றன. ஆதலினாலேதான் மறை மனத்தைப் பற்றி முதன் முதலில் விரிவான ஆராய்ச்சி செய்த சிக்மண்ட் பிராய்டு என்ற வியன்னா நகரத்து வைத்தியர் குழந்தைப் பருவத்திலேயே ஒருவனுடைய பிற்கால வாழ்க்கை அமைப்பு நிர்ணயமாகி விடுகிறதென்று சொல்லுகிறார்.

மனப்போக்கு இஷ்டம்போல மாறிமாறி அமைவ தொன்றல்ல. அது பழைய உணர்ச்சிகளையும் அனுபவங் களையும், இரு கரைகளாக உடைய ஓடை போன்றது. அவற்றிற்கு அடங்கித்தான் அது பொதுவாகச் செல்லு கின்றது. மனத்தின் இரு அம்சங்களான வெளி மனமும் மறை மனமும் ஒன்றையொன்று வாழ்க்கை முழுதும் பாதிக்கின்றன. அதன் பயனாக ஒருவனுடைய நடத்தையும் குணமும் அமைகின்றன.

மறை மனத்தில் மனித ஜாதியின் அனுபவத்தால் வந்த சில உணர்ச்சிகளும் தனி மனிதனுடைய அனுபவத்தால்

சில உணர்ச்சிகளும் இருப்பதாக டாக்டர் யுங் அபிப்பிரா யப்படுகிருர். முதல் வகையில் இயல்பூக்கங்களும் மனித வர்க்கத்துக்கே பொதுவான ஆசைகளும் அடங்கி இருக் கின்றன. மிருகம் முதலிய பிறவிகளுக்கும் பொதுவானவை சிலவும் உண்டு. காதல் உணர்ச்சி இயல்பாக உள்ளது. அதுபோலவே பய உணர்ச்சியும். இவையெல்லாம் பொது வாக எல்லோருக்கும் ஏற்பட்டவை. இந்த இயல்பூக்கங் களைப் பற்றி வேறு பகுதியில் தனியே ஆராய்வோம்.

இவற்றுடன் பிறப்பிலிருந்து ஏற்பட்ட அனுபவங் களும் உணர்ச்சிகளும் மறைமனத்தில் நின்று ஒவ்வொரு மனிதனையும் அமைக்கின்றது. அவ்வுணர்ச்சிகளைப் பற்றி இன்று நமக்கு ஞாபகம் இருக்காது. என்ருலும் அவையே நம்மை ஆட்டி வைக்கின்றன.

நாம் பல பல எண்ணுகிருேம்; ஆசைப்படுகிருேம். ஆனல் அவற்றையெல்லாம் காரியத்தில் செய்து நிறை வேற்றிக்கொள்ள முடிகிறதில்லை. சிலவற்றை நிறைவேற்ற வேண்டிய ஆற்றல் இருக்காது. சிலவற்றை நிறைவேற்றச் சமூகம் இடம் கொடுக்காது. சமூக விதிகள் ஒரு பக்கம்; நீதி நெறிகள் ஒரு பக்கம்; மதம் ஒரு பக்கம்—இவையனைத் தும் சேர்ந்து நமது ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள இடம் கொடுப்பதில்லை. அதனல் பல எண்ணங் களையும் ஆசைகளையும் நாம் கைவிடவேண்டியிருக்கிறது. சிலவற்றை அடக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்படி அடக்கப்பட்ட எண்ணங்களும் ஆசைகளும் மறைமனத்தில் பதிந்து வெவ்வேறு வகைகளில் நமக்கே தெரியாமல் வெளியாகின்றன. விநோதமாக நடந்து கொள்ளுதல், பெயர்களையும் ஊர்களையும் மறந்து விடுதல், காரணமில்லாமல் பயமடைதல் முதலானவைகள் இதனல் ஏற்படுகின்றன.

பிறருடைய குற்றங்களையே எப்பொழுதும் பேசுவது சிலருடைய இயல்பாக இருக்கின்றது. சிலர் மற்றவர்கள் சாதித்த நல்ல காரியங்களைப்பற்றி மிக லேசாகப் பேசுவார்கள். சிலர் தாம் மேற்கொண்ட காரியங்கள் கைகூடாத காலத்தில் பிறர்மேல் பழி சுமத்துவார்கள். இவைகளெல்லாம் மறை மனக் கோளாறுகள்.

சிலரிடம் ஏதாவது ஒரு வகையில் குறைபாடிருக்கலாம். உடல் தோற்றம், அறிவுத் திறமை, ஒழுக்கம் இவை போன்றவற்றில் குறையுள்ளவர்கள் சமூக சேவை போன்ற ஏதாவது ஒரு துறையில் ஈடுபட்டு அதில் உயர்வடைய முயல்வார்கள். காதல் வாழ்க்கை கைகூடாத பலர் இலக்கியம், ஓவியம், இசை, விஞ்ஞானம், மதம் முதலிய துறைகளில் சிறந்தோங்கி யிருக்கிறார்களென்று சிக்மண்ட் பிராய்டு எடுத்துக் காண்பிக்கிறார்.

தானே பெரியவன் என்று நிலைநாட்ட வேண்டும் என ஒவ்வொருவனுக்கும் ஆசையுண்டாகிறது. ஆனால் அந்த ஆசை நிறைவேறாமல் பலருடைய மனத்தில் அடங்கிக் கிடக்கிறது. மறை மனத்தில் அதனால் பல கோளாறுகள் உண்டாகின்றன. பொறாமை, கொடுமை, தூற்றுதல், அனாவசியமாகச் சண்டையிடல், சிடுமூஞ்சித்தனம் முதலியவை இதன் விளைவாகப் பிறக்கின்றன.

நன்கு படிக்காத மாணவனுக்குப் பரீக்ஷையன்று கொடிய தலைவலி வந்துவிடுகிறது. பொய்த் தலைவலியல்ல; உண்மையாகவே தலைவலி. அம்மாணவனுக்கே அதன் காரணம் தெரியாது.

மேற்கூறியவை யெல்லாம் அந்தப் பொல்லாத மறை மனத்தின் வேலை. இதை நன்கறிந்து கொண்டால் அதனால் பெரிய நன்மையுண்டாகும். ஆசைகளை அடக்கி நசுக்க முயலாமல் அவற்றை உயர் மடை மாற்றம் செய்து

விட்டோமானால் அப்பொழுது இவைபோன்ற விரும்பத் தகாத கோளாறுகள் ஏற்படா. ஆசைகள் எல்லாவற்றை யும் அடையமுடியாது. சிலவற்றை அடைய யத்தனிப்பதும் சமூகத்திற்குத் தீங்காக முடியலாம். ஆதலால் அவைகளை வேறு வழியில் திருப்பித் தனக்கும் சமூகத்திற்கும் நன்மை யாகச் செய்து கொள்வதே அறிவுடைமையாகும். இவ்வாறு உணர்ச்சிகளை வேறு வழியில் திருப்புவதற்குத்தான் உயர் மடை மாற்றம் செய்தல் என்று பெயர்.

இதற்கு மறை மனத்தைப் பற்றிய ஆராய்ச்சியும் அறிவும் பெரிதும் உதவி புரிகின்றன,

மறை மனத்தைப்பற்றி மாறுபட்ட பல கருத்துக்களி ருக்கின்றன. அவைகளைப் பற்றி அடுத்த பகுதியில் கவனிப்போம்.

GOVERNMENT ORIENTAL ... LIBRARY
11 JAN 1960
MADRAS

# 5. மாறுபட்ட கருத்துக்கள்

மனத்தத்துவம் என்பது தனிப்பட்ட சாஸ்திரமாகச் சமீபகாலத்தில்தான் பிரிந்து வளர்ந்து வருகிறது. மனத்தின் தன்மைகளைப் பற்றியும் அதன் அமைப்பைப் பற்றியும் ஆராய்ச்சி செய்தவர் பலர். பொதுவாக அவர்கள் எல்லோரும் மனத்தை ஒரே மாதிரி இயல்புள்ள ஒரு முழுப் பொருளாகவே கருதி வந்தார்கள். முதன் முதலில் மனத்தில் வெளி மனம் (நனவு மனம்), மறை மனம் (நனவிலி மனம்) என இரு பகுதிகள் இருப்பதாக சிக்மண்ட் பிராய்டு தான் தமது ஆராய்ச்சியின் பயனாகக் கூறினார். அவ்விரண்டும் வேறு வேறாகப் பிரிக்கப்பட்ட இரண்டு பாகங்கள் அல்ல எனினும் அவற்றின் தன்மைகள் வேறுபட்டவை என்பது அவர் அபிப்பிராயம்.

மறை மனத்தில் பதிந்துள்ள எண்ணங்களைப் பற்றியும், அனுபவங்களைப் பற்றியும் அறிந்து, அவைகளின் மூலம் சில நோய்களை ஜோசர் ப்ரூயர் என்ற வியன்னா நகரத்து வைத்தியர் குணப்படுத்தினார். அவர் அறிந்த விஷயங்களைப் புத்தக வடிவமாக வெளியிடும்படி பிராய்டு தூண்டினார். அவ்வாறு அவர் வெளியிட்டபோதிலும் பின்னால் அவர் தொடர்ந்து மறை மனத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யவில்லை. சிக்மண்ட் பிராய்டு தான் தனியாக அதை நடத்திவந்தார். அவருடைய எண்ணங்களை ஆரம்பத்தில் பலர் எதிர்த்தார்கள். ஒருவரும் அவருடன் சேர்ந்து ஒத்துழைக்க முன்வரவில்லை. ஆனால் 1902-ம் வருஷத்திற்குப் பிறகு சிலர் அவரோடு சேர்ந்து ஆராய்ச்சிகள் நடத்த வந்தார்கள்.

மறை மனத்தைப்பற்றி விரிவாக ஆராயத் தொடங்கவே பல புதிய விஷயங்கள் வெளியாயின. மறை மன ஆராய்ச்சியே தனிப்பகுதியாகப் பிரிய ஆரம்பித்தது. பிராய்டு அதற்கு மனப் பகுப்பியல் (Psycho-analysis) எனப் பெயரிட்டார்.

மறை மனத்தைப் பற்றிய உண்மை தெரிந்தது முதல் மனத்தத்துவ சாஸ்திரத்திற்கு ஒரு தனி உயர்வு பிறந்திருக்கிறது. மனிதனுடைய நடத்தைக்கு முக்கிய காரணமாக இருப்பது இம் மறை மனமே என்பது சிலருடைய கருத்து. மனம் ஒரு பனிக்குன்று போன்றதென்று அவர்கள் கூறுகிறார்கள். பனிக்குன்று கடலிலே மிதக்கும்போது அதன் ஒரு சிறு பகுதி மட்டுமே வெளியில் தோன்றும். மற்ற பாகமெல்லாம் நீர் மட்டத்திற்கு உள்ளே மறைந்திருக்கும். அதுபோலவே மனத்தின் ஒரு பகுதிதான் வெளிப்படையாகத் தோன்றி வெளி மனமாக இருக்கிறதென்றும், மற்ற பகுதி மறைந்து நின்று மறை மனமாக இருக்கிறதென்றும் அவர்கள் விளக்கஞ் செய்கிறார்கள். இப்படி மனத்தின் பெரும் பகுதி மறைந்திருந்தாலும் அப்பகுதிதான் ஆதிக்கம் செலுத்துகிறது.

சிக்மண்ட் பிராய்டும் அவரைப் பின்பற்றுவோரும் கூறுவதாவது:—வெளி மனத்தால் நினைப்பவையெல்லாம் மறை மனத்தால் பாதிக்கப்படுகின்றன; ஆனால் அவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்வது வெகு அருமை.

பிராய்டின் கருத்துக்களை எல்லா மனத் தத்துவர்களும் ஏற்றுக்கொள்வதில்லை. மனப் பகுப்பியலார்களிலும் சிலர் அவற்றைப் பூரணமாக ஒத்துக்கொள்வதில்லை. ஆல்பிரட் ஆட்லர், டாக்டர் சீ. யுங் என்ற மனப் பகுப்பியலார் அவர்களில் முக்கியமானவர்கள்.

பொதுவாக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத உணர்ச்சிகளும், காம இச்சைகளுமே மறை மனத்தில் அழுந்திக் கிடப்பதாகப் பிராய்டு கூறுகிறார். அவ்வுணர்ச்சிகள் மேலெழுந்து ஆதிக்கம் செலுத்த முயல்கின்றன வென்றும் மனிதன் அவற்றை அடக்க முயல்வதால் மனத்தில் ஒரு போராட்டம் நிகழ்கின்றதென்றும் அதன் விளைவின் படி அவனுடைய தன்மையும் நடத்தையும் அமைகின்றன வென்றும் அவர் விளக்கம் செய்கிறார். ஆட்லர் கூறுவது வேறு. அவர் கூறுவதாவது: ஒவ்வொரு மனிதனுக்கும் தான் ஏதாவதொரு துறையில் தலைமை ஸ்தானம் வகிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கின்றது. அந்த ஆர்வமே அவனுடைய குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கின்றது. அதன் மூலம் அவனுடைய தன்மையும் நடத்தையும் அமைகின்றன. டெமாஸ்தனிஸ் முதலில் திக்குவாயராக இருந்தார். ஆனால் பெரிய பேச்சாளராக வேண்டும் என்று உறுதியோடு முனைந்து அதில் வெற்றியுமடைந்தார் என்பது யாவரும் அறிந்த விஷயம். இவருடைய சரித்திரம் ஆட்லரின் கருத்தை மெய்ப்பிக்கத் தக்க சான்றாக இருக்கிறது. மனிதனுக்கு ஓரளவு அதிகாரம் செலுத்தக்கூடிய வாய்ப்பில்லாவிட்டால் அவன் தாழ்மை உணர்ச்சியால் பீடிக்கப்படுகிறான் என்பது ஆட்லரின் கருத்து.

மனிதனுக்குள்ளே விவரிக்க முடியாத ஓர் உயிர் வேகம் இருக்கிறது. அதிலிருந்துதான் பல இயல்புகள் பிறக்கின்றன என்பது டாக்டர் யுங்கின் எண்ணம். எல்லாத் துறைகளிலும் மனம் விரிவடையாமல் ஏதாவது ஒரு துறையில் மட்டும் அது வளர்வதாலேயே மறை மனக் கோளாறுகள் ஏற்படுவதாக அவர் கருதுகிறார். மக்களை இரு வகையாகப் பிரிக்கலாம். உள்ளக் கிளர்ச்சி மிகுந்தவர்கள் ஒரு வகை, சிந்தனை சக்தி மிகுந்தவர்கள் மற்றொரு வகை. உலகத்திலே ஒருவகையான செயல் புரிய உள்ளக் கிளர்ச்சி அதிகம்

வேண்டியிருக்கும்; மற்ருெரு வகையான செயல் புரியச் சிந்தனை அதிகம் வேண்டியிருக்கும். ஆதலால் அவற்றிற்கு ஏற்றவாறு தன்மை அமைந்த மனிதர்கள் அச்செயல்களைச் செய்யவேண்டும். ஆனல் பல சமயங்களில் மனிதன் தன் இயல்புக்கு ஒவ்வாத காரியத்தையும் செய்யவேண்டி நேரிடு கிறது. அப்பொழுதுதான் அவன் மனத்தில் போராட்டம் நேர்ந்து மறைமனக் கோளாறுகள் உண்டாகின்றன. மேலும் மறை மனம் தனிப்பட்ட மனிதனுடைய செய்கை களால் மட்டும் அமைவதில்லை என்று யுங் கருதுகிருர். பாரம்பரியத்தாலும் மறை மனக் கோளாறுகள் உண்டா கின்றன என்று அவர் சொல்லுகிருர்.

மனப் பகுப்பியலார்களுக்குள்ளே சிறுசிறு கருத்துக் களில் மாறுபாடுடைய வேறு சிலரும் இருக்கிருர்கள். இப் படிக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் மனத் தத்துவ ஆராய்ச்சியிலே மனப் பகுப்பியல் ஒரு முக்கியமான முன் னேற்றத்திற்குக் காரணமாக இருக்கிறதென்பதை யாரும் மறுக்கமுடியாது. மனப் பகுப்பியலின் அஸ்திவாரமாக வுள்ள கொள்கைகள் உண்மையானவை யென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

# 6. மூன்று பிரிவுகள்

மனம் என்பது ஒரு பொருளல்ல என்று கண்டோம். அது கை கால் போன்ற ஒரு உறுப்பு அல்ல என்றாலும் மனிதனிடத்திலே உள்ள ஒரு முக்கிய அம்சம் என்றும் கண்டோம். மனம் என்கிற மாயம் மனிதனுக்குத் தனிச் சிறப்பு அளிக்கிறதென்றும், அதை நனவு மனம் (வெளி மனம்) நனவிலி மனம் (மறை மனம்) என இரண்டு பிரிவு களாகப் பிரிக்கலாமென்றும் கண்டோம்.

மனத்திலே உண்மையில் இவ்விதமான பிரிவுகள் இல்லை. அது தொழிற்படும் வகையை அனுசரித்து இப் பிரிவினைகள் கூறப்படுகின்றன. ஆராய்ச்சிக்கு எளிதாக இருக்கும் பொருட்டு இம்மனத்தை இன்னும் சற்று விரிவாக மூன்று பிரிவுகளாகச் செய்யலாம். நனவு மனம், நனவிலி மனம் என்ற இரு பிரிவுகளைப்பற்றி முன்பே அறிவோம். அந்த மூன்றாவது பிரிவு என்ன என்பதை இனிக் கவனிப்போம்.

நமக்கு லேசாக அறிமுகமானவர் ஒருவர் பல நாட் களுக்குப் பிறகு வருகிறார். அவருடைய பெயர் சட்டென்று ஞாபகத்திற்கு வருவதில்லை. கொஞ்ச நேரம் யோசித்துப் பார்க்கிறோம். பல பெயர்களைச் சொல்லிக்கூடப் பார்க் கிறோம். "மனத்திலே இருக்கிறது; சொல்ல வரமாட்டே னென்கிறது" என்றும் சொல்லத் தோன்றுகிறது. பிறகு திடீரென்று பெயர் ஞாபகத்திற்கு வந்துவிடுகிறது. "யார், நாராயணசாமியா? வா வா, பார்த்து ரொம்ப நாளாகி விட்டது" என்று வரவேற்க ஆரம்பிக்கிறோம்.

நனவு மனத்திலே அப்பெயர் நின்றிருந்தால் ஞாபகத்திற்குக் கொண்டுவர அவ்வளவு நேரமாகாது. ஆனால் அது நனவிலி மனத்திற்குள் அழுந்திவிட்டதாகவும் கூற முடியாது. நனவிலி மனத்தில் அழுந்தியதை அவ்வளவு எளிதில் வெளிக் கொண்டுவர இயலாது. ஆதலால் இந்த விஷயம் இடையிலே எங்கேயோ இருந்திருக்க வேண்டும்.

நேற்று உண்ட சாம்பாரின் பெயர் நமது வெளி மனத்தில் சாதாரணமாக இருப்பதில்லை. நாம் அதை இப்பொழுது நினைத்துக் கொண்டா இருக்கிறோம்? தனிப்பட்ட விசேஷம் கொண்டதாக ஒருகால் இருந்தால் மட்டும் இப்பொழுது அதை நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால் சாதாரணமாக அந்த நினைவு நனவு மனத்தில் இருப்பதில்லை. ஆனால் கொஞ்சம் நினைத்துப் பார்த்தால் நாம் சாப்பிட்ட சாம்பாரின் பெயர் ஞாபகத்துக்கு வந்துவிடும்.

இப்படிக் கொஞ்சம் நினைத்ததும் ஞாபகத்துக்கு வரும் விஷயங்களெல்லாம் நனவடி மனம், இடை மனம் (Sub-conscious mind) என்னும் பகுதியில் இருப்பதாகக் கூறுவார்கள். நனவு மனத்தை ஒட்டியதுபோலவே உள்ள அடிப்பாகம் இது. அதற்கும் கீழே சூழ்ந்திருப்பது மறை மனம். ஆகவே ஆராய்ச்சியின் பொருட்டு மனமானது நனவு மனம், நனவடி மனம், நனவிலி மனம் என மூன்று அம்சங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றை மனத்தின் மூன்று நிலைகள் என்றும் கூறலாம். மனம் என்று சாதாரணமாகக் கூறும்போது நனவு மனத்தையே நாம் குறிப்பிடுகிறோம்.

# 7. ஞாபகமும் கற்பனையும்

வாழ்க்கையிலே எத்தனை எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன; எத்தனை எத்தனையோ அனுபவங்கள், புலன் உணர்ச்சிகள் உண்டாகின்றன. அவைகளெல்லாம் மனத்திலே எங்கேயோ பதுங்கிக் கிடக்கின்றன. சில விஷயங்கள் நினைத்த மாத்திரத்திலே ஞாபகத்திற்கு வந்து விடுகின்றன. சில விஷயங்கள் அவ்வளவு விரைவிலே நினைவுக்கு வருகிறதில்லை. சில மறந்தே போகின்றன; எவ்வளவு நேரம் முயன்று நினைத்துப் பார்த்தாலும் ஞாபகத்திற்கு வருவதேயில்லை.

சென்ற வாரம் செவ்வாய்க்கிழமையன்று சாப்பிட்ட பொரியல் அல்லது சாம்பார் ஞாபகத்தில் இருக்கிறதா? அது மறந்தே போகிறது. அப்படி மறந்துபோவதும் நல்லது தான். அனாவசியமான பல விஷயங்களை ஞாபகத்தில் வைத்திருந்தால் மனத்திற்கு அது வீண் சுமைதானே?

ஆனால் அந்தச் செவ்வாய்க்கிழமையன்று சாப்பிட்ட சாம்பாரால் வயிற்றுக் கோளாறு ஏற்பட்டுத் தொந்தர வுண்டாகி யிருந்தால் அந்தச் சாம்பாரைப் பற்றிய நினைவு அவ்வளவு சுலபமாக மறந்து போவதில்லை. "அப்பா, அந்தச் சாம்பாரைச் சாப்பிட்டு என் வயிறு கெட்டுப் போச்சு" என்று பலநாள் சொல்லிக் கொண்டே யிருக்கிறோம்.

நமக்குத் துன்பத்தையோ, இன்பத்தையோ அளித்த விஷயங்கள் ஞாபகத்தில் இருக்கின்றன. அவற்றிலுங் கூடத் துன்பந் தந்த விஷயங்கள் கொஞ்சம் விரைவிலே மறந்துபோகின்றன. இன்ப நினைவுகள் நன்கு மனத்திலே

பதிந்து நிற்கின்றன. துன்பந் தந்தவை நினைவிலிருந்தாலும் அவை இப்பொழுது கூர்மை மழுங்கி யிருக்கின்றன; அவற்றின் வேகம் வரவரக் குறைந்து போகின்றது.

ஒருவன் இளமைப் பருவத்திலே தான் படித்த பள்ளிக்கூடம், கல்லூரி ஆகியவற்றைப் பெருமையோடு, மகிழ்ச்சியோடு சென்று பார்த்து வருகின்றான். அங்கு பெற்ற இன்ப அனுபவங்களெல்லாம் அப்பொழுது ஞாபகத்திற்கு வருகின்றன. அங்கு பட்ட துன்பங்களெல்லாம் மறந்துபோய் விடுகின்றன. நினைவிற்கு வந்தாலும், "அப்பா, அந்தக் கணக்கு வாத்தியாரா! ரொம்பப் பொல்லாதவர். சரியான அடி கொடுப்பார். இருந்தாலும் நல்லவர். அவர் அப்படி யெல்லாம் சொல்லிக் கொடுக்காமலிருந்தால் எனக்குக் கணக்கே வந்திருக்காது" என்றுதான் பொதுவாகச் சொல்லத் தோன்றும்.

சிலபேருக்கு ஞாபக சக்தி மிக அதிகமாக இருக்கும். ஒருதடவை கேட்டதை அப்படியே திருப்பிக் கூறக் கூடியவர்கள் உண்டு. ஏகசந்தக் கிராகிகள் என்போர் ஒருமுறை சொல்வதை அப்படியே திருப்பிக் கூறிவிடுவார்களாம். மாம்பழக் கவிச்சிங்க நாவலருக்கு வைசூரி கண்டு இளமையிலே கண் குருடாகிவிட்டது; ஆனால் அவருடைய ஞாபக சக்தி மிக அற்புதமானது. ஒரு நூல் முழுவதையும் யாராவது படித்துக் காட்டினால் உடனே அவர் அதைத் திருப்பிக் கூறிவிடுவாராம்.

சிலருக்கு ஞாபக சக்தி மிகக் குறைவாக இருக்கும். வெகு சீக்கிரத்திலே மறந்து விடுவார்கள். வயதாக ஆக ஞாபகசக்தி குறைவதும் உண்டு. ஆனால் ஞாபக சக்தியே இல்லாதவர்கள் கிடையாது. யாருக்காவது அவருடைய தாயார் மறந்து போகிறதா? அந்த அளவுக்காவது ஞாபக சக்தி இருக்கும்.

மனம் ரொம்ப மாயமானது என்று சொன்னேனல்லவா? அது சில சமயங்களிலே அதற்குப் பிடிக்காதவற்றை மறந்துவிடும். எப்படியோ அது ஞாபகத்தில் வராமல் செய்துவிடும். எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவனுக்கு மற்றவர் கொடுத்திருக்கிற கடனைப்பற்றி அவனுக்கு உண்மையாகவே ஞாபகம் வராது; ஆனால் எப்பொழுதாவது அவன் ஒரு எட்டணுச் சில்லறை கொடுத்து விட்டால் அதை மனத்தில் வைத்துக்கொண்டு கேட்டுக் கொண்டேயிருப்பான்!

வாழ்க்கையின் முற்போக்குக்கு ஞாபகசக்தி அவசியம். நாம் அடைந்த அனுபவங்கள் தனித் தனியாக நினைவில் இல்லாதுபோனாலும் அவற்றின் விளைவாக நாம் எதிர்கால வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள வேண்டுமல்லவா? நெருப்பைத் தொட்டால் சுடும் என்று குழந்தைக்கு ஆரம்பத்தில் தெரியாது. ஒரு தடவை அல்லது இரண்டு தடவை அந்த அநுபவம் ஏற்பட்ட பிறகாவது மறுபடியும் நெருப்பைத் தொடாமல் இருக்கவேண்டுமல்லவா?

ஞாபகத்திலே இரண்டு வகையுண்டு. சொந்த அநுபவத்தைப் பற்றிய ஞாபகம் ஒருவகை. பிறருடைய அநுபவத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு அதை ஞாபகத்தில் வைத்திருப்பது ஒருவகை. சிவாஜியினுடைய வீரச் செயல்களைப் பற்றிக் கேட்டிருக்கிறோம்; படித்திருக்கிறோம். அவை நமது சொந்த அநுபவமல்ல. இருந்தாலும் அவையும் ஞாபகத்தில் இருக்கின்றனவல்லவா? இந்த இருவகை ஞாபகமும் அவசியமே.

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு ஊக்கமும், உற்சாகமும், ஊட்டமும் அளிப்பவற்றை ஞாபகத்தில் வைத்திருப்பது எவ்வளவு அவசியமோ அதுபோலவே அவற்றிற்கு மாறானவற்றையும், தளர்ச்சியும் தோல்வி மனப்

யான்மையும் தருவனவற்றையும் மறந்து விடுவதும் அவசியமே.

சொந்த அனுபவங்களையும் பிறர் அனுபவங்களையும் ஞாபகத்தில் கொண்டு அவற்றில் பயனடையக்கூடிய திறமை பெரியதோரளவில் மனிதனுக்குத்தான் உண்டு. விலங்குகள் முதலான மற்ற உயிர்கள் சொந்த அநுபவங்களால் ஓரளவிற்கே பயனடையும்; பிறர் அனுபவங்களால் பயனடைவதே அநேகமாகக் கிடையாது.

ஞாபகத்திற்கும் கற்பனைக்கும் தொடர்புண்டு. ஆனல் இரண்டும் வேறு வேறு. நேற்றுப் பூஞ்சோலையிலே கண்ட அழகிய நங்கையை மனக்கண் முன்பு கொண்டுவரலாம். அவளுடைய தோற்றம் தெளிவாக மனக்கண் முன்பு தோன்றுவதற்கு ஞாபகசக்தி உதவுகிறது. நாமே ஓர் ஒப்பற்ற அழகுவாய்ந்த நங்கையைக் கற்பனை செய்யலாம். இந்தக் கற்பனை நங்கையை அழகுபடுத்த நமது ஞாபகசக்தி உதவுகிறது. பல இடங்களிலே பல்வேறு நங்கையரிடத்திலே கண்டு களித்த அழகுகளையெல்லாம் நமது ஞாபகசக்தி திரட்டி இந்தக் கற்பனை நங்கையை உருவாக்க உதவி செய்கிறது. ஒரு நங்கையின் கண்கள் மிக அழகாக இருக்கும். மற்ருெருத்தியின் இதழ்கள் வசீகரமாக இருக்கும். ஞாபகத்திலிருந்த இவற்றையெல்லாம் சேர்த்துத் திரட்டி அந்தக் கற்பனை உருவாகிறது.

சில சமயங்களிலே எது கற்பனை, எது ஞாபகம் என்று தெரியாமற் போவதுண்டு. ஒருவன் புதிதாக ஒரு கதை கற்பனை செய்வதாக எண்ணிக் கொண்டிருப்பான். ஆனல் உண்மையில் அவன் எப்பொழுதோ படித்த கதையாகவே அது இருக்கும். அதேபோல ஞாபகத்திலிருந்து சொல்லுவதாக ஒன்றை ஒருவன் சொல்லுவான். ஆனல் அது வெறுங் கற்பனையாகவே இருக்கும்.

ஞாபகத்திலே இப்படிப் பல தவறுகள் ஏற்படுவதுண்டு. காலம் செல்லச் செல்ல ஒரு சம்பவத்தைப் பற்றிய நுணுக்கமான விவரங்கள் மறைந்து போகின்றன. அந்த இடத்தைக் கற்பனை பூர்த்தி செய்து விடுகிறது. ஒரு சம்பவத்தைப் பற்றிப் பிறருக்கு எடுத்துச் சொல்லும்போது சாதாரணமாகத் தம்மையறியாமலேயே சில விஷயங்களை மிகைப்படுத்தியும், சிலவற்றை லேசாகவும் சொல்லுவதுண்டு. சொல்லுவது எல்லோருடைய கவனத்தையும் கவரவேண்டும் என்ற மறைமுகமான ஆசையே இதற்குக் காரணம். மேலும் நமக்குப் பிடித்தமானவற்றையே மனம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள விரும்புகிறது. அதனாலும் ஒரு சம்பவத்தைப்பற்றி ஞாபகப்படுத்திக் கூறுவதிலும் தவறு ஏற்படுகிறது.

ஞாபகசக்தி மனத்தின் ஒரு அம்சம். அது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருப்பதால் அதன் தன்மையை அறிந்து கொள்வது நல்லது.

# 8. கனவு

"நான் கனவு கண்டால் கண்டது கண்டபடியே நடக்கும்" என்று சிலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். "கனவில்காண்பதற்கு நேர்மாறாகத்தான் வாழ்க்கையில் நடக்கும்; நஷ்டமடைவதுபோலக் கனவு கண்டால் லாபம் கிடைக்கும்" என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

"கனவிற்கு ஒரு பொருளும் கிடையாது; அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை" என்று கூறுபவர்களும் உண்டு.

"கவலையே இல்லாமல் ஆழ்ந்து தூங்குகிறவன் கனவு காணமாட்டான்; கவலை நிறைந்தவன்தான் கனவு காண்கிறான்" என்றும் பலர் பேசக் கேட்டிருக்கிறோம்.

உறங்கும்போது கனவு காண்பதென்பது குழந்தைகள் முதற்கொண்டு முதியவர்கள் வரை எல்லோருக்கும் பல சமயங்களில் ஏற்படுகின்ற ஒரு நிகழ்ச்சி. அக் கனவிற்கு ஏதாவது காரணம் உண்டா, பொருளுண்டா, அதனால் ஏதாவது பயன் உண்டா என்பனவற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஒரு மனிதனுடைய தன்மையை அறிந்து கொள்வதற்கு அவன் காணும் கனவுகள் பெரிதும் துணைபுரிகின்றன" என்று மறைமனத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்த பிராய்டு, ஆட்லர், யுங் என்ற மூவரும் அறுதியிட்டுக் கூறுகிறார்கள். மன நிலையை அறிந்து கொள்வதற்குக் கனவு ஒரு வழியென்பதை மற்ற மனத் தத்துவர்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

மனக் கோளாறுகளைத் தெரிந்து கொள்வதன்மூலம் பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று பிராய்டு முதலில் கண்டார். அதன் பயனுகவே மனத்தில் மறை மனம் என்ற ஒரு பகுதியிருக்கிறதென்றும் அவர் உணர்ந் தார். மன நோய்களைப் போக்குவதற்கு மறை மனத்தில் அழுந்திக்கிடக்கும் எண்ணங்களையும் ஆசைகளையும் அறிய வேண்டும். அதற்குப் பிராய்டு முதலில் மன வசிய (Hypnotism) முறையைக் கையாண்டார். அதில் பல குறைபாடுகள் இருப்பதை அனுபவத்தில் தெரிந்து அவர் வேறு முறையொன்றைப் பின்னுல் கையாளலானுர். தம்மிடம் சிகிச்சைக்கு வருபவர்களை ஏதாவது ஒரு சந்தர்ப் பத்தில் தமக்குத் தோன்றும் எண்ணங்களை யெல்லாம் தோன்றியவாறே சொல்லும்படி கேட்டார். அவர்கள் காணும் கனவுகளைப் பற்றியும் வெளிப்படையாகச் சொல் லும்படி கேட்டார். மனத்தில் எழுகின்ற இழிந்த எண் ணங்களை எல்லோரும் வெளிப்படையாகக் கூறமாட்டார் கள். மன வசியத்தாலும் அவற்றை அறிந்துகொள்ளுவது அவ்வளவு எளிதல்ல. ஆனுல் கனவுகளின் மூலம் அவற்றை மறைமுகமாகக் கண்டு கொள்ளலாம் என்று பிராய்டுக்குப் புலப்பட்டது. அவர்தாம் முதன் முதலில் கனவுகளைப் பாகுபடுத்தி அவற்றைக் கொண்டு மனநிலையைக் காண முயன்றவர்.

தூங்கி எழுந்தவுடன் பல கனவுகள் மறந்துபோய் விடுகின்றன. சிலவற்றை நாம் நினைவுக்குக் கொண்டுவர முடியுமானுலும் அவை தொடர்பில்லாத விசித்திரச் செயல் கள் நிறைந்திருக்கின்றன. அதனுல்தான் கனவுக்குப் பொருளில்லையெனப் பலர் கருதுகிறுர்கள். கனவில் நிகழ் வனவற்றை நிகழ்ந்தவாறே உண்மையென எடுத்துக் கொள்ளக்கூடாது. பல கனவு நிகழ்ச்சிகளுக்குக் குறிப் பிட்ட வேறு பொருள்கள் உண்டு. அவற்றை அறிந்து

கொண்டால்தான் கனவுகளைக் கொண்டு ஒருவனுடைய மன நிலையை நன்கு அறிந்து கொள்ள முடியும்.

கனவுக்குப் பொருளிருப்பதாக நினைப்பது குருட்டு நம்பிக்கை என்று சிலர் கூறலாம். அறிவு வளர்ச்சி பெருத மக்கள்தான் கனவை நம்புவார்களென்றும் அவர்கள் பேச லாம். ஆனால் பாமரர்கள் கனவை நோக்கும் விதம் வேறு; மனத்தத்துவன் அதை நோக்கும் விதம் வேறு. "விஞ்ஞானப் பார்வையோடு மற்ற விஷயங்களை ஆராய்வதைப்போலவே கனவையும் ஆராயலாம். கனவு என்பது ஒரு அனுபவ உண்மை. ரசாயனத்திலும், உடலியலிலும் உண்மைகளை ஆராய்வதுபோல அதையும் சரிவர ஆராயலாம்" என்று ஜீ. எச். கிரீன் எழுதுகிருர். ஆதலால் கனவைப்பற்றி மனத் தத்துவமுறையில் சோதனை செய்வது அறிவுக்குப் பொருந்தியதொன்றே. அவ்வாறு சோதனை செய்து பிராய்டும் அவரைப் பின்பற்றுவோரும் பல மன நோய் களைப் போக்கி யிருக்கிருர்கள்.

மனத்தில் உள்ள எண்ணங்களையெல்லாம் மறைக்கா மல் கூறுவதைச் சாதாரணமாக மக்கள் உடைத்துச் சொல் லுவதென்று கூறுவார்கள். நான் உடைத்துப் பேசுகிறே னென்ருல் எதையும் ஒளிக்காமல் சொல்லுவதாக அர்த்தம். அம்மாதிரி ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலே எழுகின்ற எண்ணங்களையெல்லாம் உடைத்துக் கூறினால் அவற்றின் மூலம் கனவுகளின் உண்மைப் பொருளையும் கனவு காண்ப வனின் மன நிலைமையையும் அறிந்துகொள்ள முடியும். எல்லோராலும் அவ்வாறு அறிந்துகொள்ள முடியும் என்று நான் கூறவில்லை. அதற்கு மனத்தத்துவ அறிவு நிறைய வேண்டும்; அனுபவமும் வேண்டும். அனுபவம் வாய்ந்த ஒருவனுக்குஎந்தச் சந்தர்ப்பத்தை உண்டாக்கினல், அதன் விளைவாக எழும் எண்ணங்களைக் கொண்டு மன நிலையைக் காணமுடியும் என்பது தெரியும். உடைத்துப்

பேசுவதும் கனவும் ஒன்றுக்கொன்று உதவியாக நின்று ஒருவனுடைய மனநிலையை வெளிப்படுத்துகின்றன. சொல்லுவதில் சிலவற்றை மறைத்திருந்தாலும் கனவு அதைக் குறிப்பாகக் காட்டிவிடும்.

சிக்கலில்லாத சாதாரணமான பல கனவுகள் இருக்கின்றன. அவற்றின் குறிப்பைக் கண்டுகொள்வது அனைவருக்கும் எளிது.

நனவில் பூர்த்தியாகாத பல ஆசைகள் கனவிலே பூர்த்தியாவதுண்டு. காதல் வயப்பட்ட இளைஞன் தன் காதலியோடு கூடியிருப்பதாகக் கனவு காண்கிறான். வறுமையால் வாடியிருப்பவன் கனவிலே குபேரனைப்போல வாழுகிறான். அழகான பொம்மை வேண்டுமென விரும்பிய குழந்தை அதைப் பெற்று மகிழ்வதாகக் கனவு காண்கிறது.

வீட்டிலே குற்றேவல் புரிவதற்காக ஒன்பது வயதுப் பெண் ஒருத்தி யிருந்தாள். அவள் ஒருநாள் இரவில் எழுந்துட்கார்ந்து கொண்டு, "என் அக்காள் வந்து வெளியே நிற்கிறாள்; கதவைத் திறந்துவிடுங்கள்" என்று கூறினாள். ஆனால் உண்மையில் யாரும் வரவில்லை. அவள் கண்டது கனவு. தன் அக்காளைப் பிரிந்து வந்து பல நாட்களாகி விட்டபடியால் அவளைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையே இவ்வாறு கனவில் நிறைவேறி யிருக்கிறது.

சாதாரணமாகக் கனவு காணும்போது அதில் நடக்கும் சம்பவங்களெல்லாம் உண்மைபோலவே உணர்கின்றோம். கனவு காண்பவன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வாய்விட்டுச் சிரிப்பதும் அழுவதுமுண்டு. குழந்தைகளிடம் இதை அதிகமாகக் காணலாம்.

சரோஜாவுக்கு வயது நான்கு. அவள் ஓரிரவு தூங்கிக் கொண்டிருக்கும் பொழுதே விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். "ஏன் இப்படி அழுகிறாய்?" என்று கேட்ட

போது, அவள் எழுந்து, "அக்கா என் புதுப் பொம்மையை எடுத்துக் கொண்டாள்" என்று முறையிட்டாள். உண்மையில் யாரும் அவளுடைய பொம்மையை எடுத்துக் கொள்ளவில்லை. எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தன் பொம்மையை அக்காள் பிடுங்குவது போல அவள் கனவு கண்டிருக்கிறாள். முதல் நாளில் நடந்த செயலே அவள் கனவில் பிரதிபலித்திருக்கிறது.

எல்லாக் கனவுகளும் ஆசை நிறைவேற்றத்திற்காக உண்டாவதில்லை. இதில்தான் பிராய்டுக்கும் மற்றவர்களுக்கும் அபிப்பிராய வேறுபாடு உண்டாகிறது. எல்லாக் கனவுகளும் ஆசை நிறைவேற்றங்களே என்று பிராய்டு சாதிக்கிறார். மற்றவர்கள் அவ்வாறு கருதுவதில்லை. மேலே கூறிய குழந்தையின் கனவு ஆசை நிறைவேற்றமல்ல. அதன் உள்ளத்திலிருந்த பயத்தின் தோற்றமே அது.

முதல் நாள் நடந்த சம்பவங்கள் பலதடவைகளில் கனவில் தோன்றுகின்றன. ஒருநாள் நான் ஒரு அழகான நூலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். அதைக் கேட்டுக் கொண்டிருந்த பதினெட்டு வயது இளைஞன் ஒருவனுக்குப் புத்தகத்திலே மிகுந்த பற்றுண்டு. அவன் அந்நூலை ஒரு கடையில் காண்பதுபோலவும் அதை வாங்குவது போலவும் அன்றிரவே கனவு கண்டதாக என்னிடம் மறுநாள் கூறினான். "பெரும்பான்மையான கனவுகள் அண்மையில் உண்டான மனப் போராட்டங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன" என்று ரிவர்ஸ் (W. H. R. Revers) என்பார் கூறுகிறார். பல ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த சம்பவங்களை யொட்டிவரும் சில கனவுகளும் உண்டு. எனக்கு எட்டு வயதிருக்கும். என்னைவிட ஒரு வயது இளையவனான என் தோழன் ஒருவனுடன் வீதியிலே விளையாடிக் கொண்டிருந்தேன். இரண்டு மாடுகள் ஒன்றையொன்று எதிர்த்

துச் சீறிக்கொண்டு ஓடிவந்தன. நாங்கள் விளையாட்டில் ஈடுபட்டிருந்ததால் அவற்றைக் கவனிக்கவில்லை. ஒரு மாடு மற்றொன்றின்மேல் திடீரென்று பாயவே அது சமாளிக்க முடியாமல் பின்னடைந்தது. இரு மாடுகளும் வந்த வேகத்தில் என் தோழனைக் காலால் மிதித்துக்கொண்டு சென்று விட்டன. அவன் படுகாயமுற்றுப் பிரக்ஞையற்றுக் கிடந்தான். அருகிலே யாருமில்லை. நான் பயந்து நடுங்கி அசைவற்று நின்றுவிட்டேன். அது முதற்கொண்டு அடிக்கடி மாடு பாய வருவதுபோலவும், தப்பித்துக் கொண்டு ஓடக் கால் வராது நான் தடுமாறுவது போலவும் கனவு காண்கிறேன். இன்றைக்கும் மாட்டைக் கண்டால் எனக்குப் பயம். இம்மாதிரி திரும்பித் திரும்பி வரும் கனவுகளுக்குக் கூட அவற்றிற்குக் காரணமாக ஏதாவது நிகழ்ச்சிகள் சமீபத்தில் நடந்திருக்கக்கூடும். வழியிலே ஒரு மாட்டை நான் பார்த்திருக்கலாம். அது பழைய உணர்ச்சிகளை மேலுக்குக் கொண்டு வந்திருக்கும்.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட கனவுகளில் சிக்கல் ஒன்றும் இல்லையாதலால் அவற்றை எளிதாக விளக்கி விடலாம். ஆனால் பொதுவாகப் பல கனவுகள் அவ்வாறிருப்பதில்லை. அவை நம்மைத் திகைக்க வைக்கும்படியாக இருக்கின்றன. சம்பவங்களில் ஒன்றுக்கொன்று தொடர்பிருப்பதில்லை. விந்தையான காட்சிகளும், ஜீவன்களும் காணப்படுகின்றன. நடக்க முடியாத சம்பவங்களும் நடக்கின்றன. இவற்றிற்கெல்லாம் பொருள் கண்டுபிடிப்பது சுலபமல்ல. ஏன் அவ்வாறு விநோதக் கனவுகள் ஏற்படுகின்றனவென்பதையும் அவற்றின் குறிப்பு என்னவென்பதையும், அவற்றால் மன நிலையை எவ்வாறு அறிந்து கொள்ள இயலும் என்பதையும் அடுத்த பகுதியில் ஆராய்வோம்.

# 9. கனவும் மனமும்

கனவைப் பற்றி மூன்றுவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஒன்று பாமர மக்களுடையது. அவர்களுக்குக் கனவிலே அறிவுக்குப் பொருந்தாத ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. தெய்வ வாக்காகவே அதை எடுத்துக் கொள்ளுவார்கள். மதிநுட்பம் வாய்ந்தவர்கள் கூடச் சில சமயங்களில் கனவை அனுசரித்துக் காரியம் செய்வார்கள். கனவு ஒரு சில சமயங்களில் மெய்யாவதும் உண்டு. அந்த அனுபவ உண்மையை ஒட்டித்தான் நந்தனுரின் கனவும் திரிசடையின் கனவும் தீட்டப்பட்டிருக்கின்றன. கனவு பலித்ததாகச் சிலர் கூறுவதையும் கேட்டிருக்கிறோம். இந்த நம்பிக்கையே சொப்பன நூல்கள் எழக் காரணம். அவை எவ்வளவு தூரம் விஞ்ஞான முறை ஆராய்ச்சிக்குப் பொருந்துமென்பது கவனிக்கத்தக்கது. கனவைப்பற்றி மற்ருெரு அபிப்பிராயம் விஞ்ஞானிகளில் ஒருசாரார் கொண்டிருப்பது. கனவுகள் உண்டாவதற்கு உடல் நிலையே காரணம் என்று அவர்கள் கருதுகிருர்கள். அஜீரணம், மலச்சிக்கல் போன்ற கோளாறுகள் மூளையைப் பாதித்து உறக்கத்திலே கனவுகளை உண்டாக்குகின்றன வென்றும், உறங்கிக் கொண்டிருக்கிற ஒருவன்மேல் ஒரு சொட்டுத் தண்ணீர் விட்டால் அவன் மழை பெய்வது போலக் கனவு கண்பான் என்றும் அவர்கள் கூறுகிருர்கள். இம்மாதிரி சோதனைகள் செய்து கனவுகளை யுண்டாக்கியும் இருக்கிருர்கள். நான் பல சிறுவர்களுடைய கனவுகளை ஆராய்ந்திருக்கிறேன். உறங்கும்போது சிறுநீர்ப்பை நிறைந்துவிட்டால் கனவு ஏற்பட்டு, முடிவில் அதன் உபாதையைத் தீர்த்துக் கொள்வது போன்ற சம்பவம்

ஏற்படுவதாகப் பலர் உரைக்கிறார்கள். அதன் காரணமாக உறக்கத்தில் படுக்கையிலேயே ஜலங் கழித்து விடுகின்ற பாலர்களுமுண்டு. உறக்கத்தில் ஜலங் கழிப்பதற்கு வேறு காரணங்களுமுண்டு.

மூன்றாவது அபிப்பிராயம் மனத்தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது. மன நிலையே கனவுக்குக் காரணமென்றும், உடற் கோளாறால் கனவு ஆரம்பமானாலும், அதில் தோன்றுகின்ற நிகழ்ச்சிகள் மன நிலையைப் பொருத்தவையே என்றும் ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். ஒரு துளி நீரைத் தூங்குகிறவன்மேல் தெளித்தால் மழை பெய்வது போலக் கனவு உண்டாகலாம். ஆனால் பலரைக் கொண்டு இச்சோதனையைச் செய்து பார்க்கும்போது எல்லோரும் ஒரேவிதமாகக் கனவு காணமாட்டார்கள் என்பது தெரியவரும். சிறு தூறல் விழுவதுபோல ஒருவன் கனவு காணலாம்; பெருமழை பெய்வதுபோல மற்றொருவன் காணலாம். இடியும் மின்னலும் சேர்ந்திருப்பதாக வேறொருவன் காணலாம். மேலும் மழை பெய்வதுடன் வேறு பல சம்பவங்களையும் அவர்கள் காண்பார்கள். அவைகள் ஒன்றிற்கொன்று மாறுபட்டிருக்கும். அவையெல்லாம் மன நிலையைப் பொறுத்தது என்று மனத்தத்துவர்கள் வியாக்கியானம் செய்கிறார்கள். சிக்மண்ட் பிராய்டு தான் முதல் முதலில் கனவுகளைப் பாகுபடுத்தி அவற்றின் பொருளை விஞ்ஞான முறையில் அறிய முயன்றவர் என்பதை முதற் கட்டுரையிலேயே கண்டோம்.

எல்லாக் கனவுகளும் ஆசை நிறைவேற்றத்திற்காக ஏற்படுபவை என்பது பிராய்டின் சித்தாந்தம். 'நனவில் கைகூடாத ஆசைகள் கனவில் கைகூடுவதால் மனத்திற்கு ஆறுதல் கிடைக்கிறது; நல்ல உறக்கமும் ஓய்வும் உண்டாகின்றன; ஆதலால் கனவே உறக்கத்தைப் பாதுகாக்கிறது' என்று அவர் சொல்லுகிறார். "உறக்கத்தைக் கனவு பாதிப்

பதில்லை; அதைப் பாதிக்கும்படியான மனச் சுமைகளை நீக்கிக் கனவு நல்ல ஓய்வைக் கொடுக்க முயல்கிறது."

"மறைந்து கிடக்கும் ஆசைகள் கனவில் பூர்த்தியாவதால் மனத்தில் அமைதி ஏற்படுகின்றது. ஆனால் பிராய்டு கருதுவதுபோல எல்லாக் கனவுகளும் ஆசை நிறைவேற்றத்திற்காகவே உண்டாகின்றன என்றால் ஆசை என்பதற்கு மிக விரிந்த பொருள் கொள்ளவேண்டி யிருக்கும். அவ்வாறு வலிந்து பொருள் கொள்வது சரியல்ல" என்று பல மனத் தத்துவர்கள் எண்ணுகிறார்கள்.

பொதுவாகக் கனவுகளை ஆராய்வது மிக்க ரசமான காரியமாகும். ஒன்பது முதல் பன்னிரண்டு வரை வயதுள்ள சிறுவர்கள் கண்ட சிக்கலில்லாத சில கனவுகளைக் கீழே தருகிறேன்.

கனவு 1. "நான் ஒரு பெரிய அரண்மனைக்குள் நுழைந்து விட்டேன். அங்கு லட்டு, ஜிலேபி, எல்லாம் இருந்தன. நான் அவற்றை என் வாயில் எடுத்தெடுத்துப் போட்டுக் கொண்டேன். அப்பொழுது ஒரு பெரிய தடி மனிதன் வந்து என்னை அடித்தான். நான் அழுதுகொண்டு விழித்துக் கொண்டேன்."

கனவு 2. "என் தகப்பனார் நூறு ரூபாய் கொடுத்து என்னை ஊருக்குப் போகச் சொன்னார். நான் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது ஓர் ஆகாய விமானம் வந்தது. நான் அதில் ஏறிக் கொண்டேன். அதில் எல்லோரும் வெள்ளைக்காரர்கள். கொஞ்சதூரம் போனதும் விமானம் கெட்டுவிட்டது. உடனே பாரஷூட் என்னும் குடையைக் கொடுத்தார்கள். நான் அதைப் பிடித்து இறங்கினேன். ஒரு குளத்திற்குள் போய் விழுந்தேன். உடனே விழித்துக் கொண்டேன்."

கனவு 3. "நான் பழனிக்கு ரெயிலில் போவதாகக் கனவு கண்டேன். ஒரு ஸ்டேஷனில் இறங்கினேன். அப்

பொழுது டிக்கெட் பரிசோதகர் வந்து டிக்கெட் கேட்டார். நான் வாங்கவில்லை யென்று கத்தினேன். 'ஏண்டா சத்தம் போடுகிறாய் ?' என்று அப்பா கேட்டார். நான் விழித்துப் பார்த்தேன். அப்பொழுது படுக்கையில் படுத்துக் கொண் டிருந்தேன்.''

வெவ்வேறு அளவில் ஆசை நிறைவேற்றத்தை இக் கனவுகளில் காணலாம். அதிகாரம் செய்தல், மிரட்டுதல், அடித்தல் முதலிய காரியம் செய்வதாகக் கனவில் தோன்று பவர் பொதுவாகத் தந்தையைக் குறிப்பார். உயரத்தி லிருந்து விழுவது போன்ற கனவுகள் மனித பரிணாமத்திலே அவன் விலங்கு நிலையிலிருந்த காலத்தில் ஏற்பட்ட அனுப வத்தைக் குறிப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். மரங்களில் வசித்த அவ்விலங்குகள் தூக்கத்தில் தவறிக் கீழே விழுந்த தால் உண்டான ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சி நிரந்தரமாக மனத்தில் பதிந்துவிட்டதாகவும், அது வழிவழியாக வந்து இன்னும் உறக்கத்திலே கனவாகத் தோன்றுகிறதென்றும் அவர்கள் விளக்குகிறார்கள். உறங்கும்போது கால்களை நீட்டுவதாலோ அல்லது வேறு உடல் அசைவுகள் ஏற்படு வதாலோ கீழே விழுவதுபோன்ற கனவு பிறக்கலாமென்று உடலியலார் கூறுகிறார்கள். நல்ல நடத்தையிலிருந்து தவறி நடக்க ஏற்பட்டுள்ள விருப்பத்தை அக் கனவு காண்பிக் கிறது என்று மனப்பகுப்பியலார் எண்ணுகிறார்கள்.

கனவில் தோன்றும் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிப் பொதுவான விளக்கம் சொல்லலாமென்றாலும் அவ்வாறு விளக்கம் செய்வதற்கு யாதொரு திட்டமான விதியோ சூத்திரமோ கிடையாது. கனவு காண்பவனுடைய தனிப்பட்ட மன நிலைக்கு ஏற்றவாறு அவற்றிற்குப் பொருள் காணவேண்டும். பல கனவுகளை ஆராயும்போது அவை விநோதமாகவும், தொடர்பின்றியும், சிக்கல்கள் மிகுந்தும் இருப்பது தெரியவரும். அவற்றையெல்லாம்

புரிந்து கொள்ளுவதற்குப் பிராய்டு ஒரு புதிய முறையைக் கையாண்டார். அதைத்தான் எண்ணச் சேர்க்கை முறை (Free Association Method) என்கிருர்கள். ஒரு கனவைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு பகுதியையும் அக்கனவைக் கண்டவனிடம் கூறும்போது அவன் மனத்தில் ஏற்படும் எண்ணங்களை யெல்லாம் ஒளிக்காமல் சொல்லும்படி கேட்கவேண்டும். அப்படிக் கேட்கும் சமயத்தில் அவனைத் தனியாக ஒரு இருண்ட அறையில் படுத்திருக்கும்படி செய்ய வேண்டும். அவன் கூறுகின்றவைகளைக் கனவுடன் சேர்த்து ஆராய்ந்தால் அவனுடைய மனநிலையையும் அதில் மறைந்து கிடக்கும் ஆசைகளையும் அறியமுடியும் என்று பிராய்டு சொல்லுகிருர். அவ்வாறு ஆராய்ந்த கனவைப் பற்றி அடுத்த பகுதியில் காண்போம்.

# 10. கனவின் பொருள்

பல கனவுகள் சிக்கல் நிறைந்திருக்கின்றன: அவற்றில் தோன்றும் நிகழ்ச்சிகள் மேலாகப் பார்க்கும்போது அர்த்தமற்றவைகளாகவும் இருக்கின்றன. கோ. என்பவர் கண்ட ஒரு கனவைப் பாருங்கள்.

"ஏதோ ஒரு பெரிய கோயில். அங்கே நானும் என் நண்பர்கள் சி. வே. மா. ஆகிய மூவரும் சேர்ந்து ஒருவனைக் கொலை செய்தோம். அவனுடைய மூக்கை மாத்திரம் அறுத்துச் சந்தனத்தில் வைத்துச் சாமிக்கு வைத்தோம். பிரேதம் வெளியிலேயே கிடந்தது. சி. தான் மூக்கை அறுத்தவர். கடவுளைத் தொழுவதற்காகப் பலர் ஒரு மோட்டார்க் காரில் வந்தார்கள். உடனே நான் பிரேதத்தைத் தூக்கிக் கோபுரத்தின் மேல் வீசினேன். இதை எனது ஆசிரியர் ஒருவர் பார்த்துக்கொண்டார்.

"நான் ஓடிவந்து விட்டேன். வழியில் என் நண்பன் வீ. யைச் சந்தித்து வேறொருவனிடம் சைக்கிள் வாங்கி இருவரும் ஏறிக்கொண்டு ஊருக்குச் சென்றோம். வழியில் சி. தம் அண்ணனிடம் சாதாரணமாகப் பேசிக்கொண்டு வந்துகொண்டிருந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கொலை செய்துவிட்டு இவர் இவ்வளவு தாராளமாக வெளியில் நடமாடுகிறாரே என்று வியந்தேன்.

"நாங்கள் ஒரு சத்திரத்தில் புகுந்துகொண்டிருந்தோம். ஆனால் சி. வேறு சில நண்பர்களுடன் வழியில் சென்றுகொண்டிருந்தார்."

கனவுகள் பல இவ்வாறிருப்பினும் பிராய்டு கூறுவது போல் அவற்றை ஆராய்ந்து பொருள் கண்டால் மன நிலை

யையும் கோளாறுகளையும் அறிந்துகொள்ள முடியும். கனவை ஆராய்வதற்கு எண்ணச் சேர்க்கை முறையைக் கையாளுகிறார்கள்.

அம்முறையைப் பின்பற்றி ஆராய்ந்த ஒரு கனவையும் அதன் பயனையும் சோதனை செய்தது போலவே கீழே தருகிறேன்:—

ப. என்ற நண்பர் கண்ட கனவு: "உலாவச் சென்று கொண்டிருக்கிறேன். ஓரிடத்திலே ஒரு பாம்புப் புற்று இருந்தது. ஓணான் ஒன்று பாம்பைப் பிடித்துத் தின்ன நினைத்து அந்தப் புற்றுக்குள் நுழைந்தது. நான் சற்றுத் தூரம் போய்த் திரும்பி அதே வழியில் வந்தேன். உள்ளே சென்ற ஓணான் வேகமாக வெளியே வந்து குதித்தது. ஒரு பாம்பு அதைத் துரத்திக்கொண்டு வந்தது. என்னைத் தாண்டித் துரத்திக்கொண்டே போயிற்று. ஓணானைப் பாம்பு தன் வாயில் கவ்விக்கொண்டது."

சோதனை:— இரவு 7½ மணிக்கு எண்ணச் சேர்க்கை முறையில் சோதனை ஆரம்பிக்கிறது. எங்கும் நிசப்தம். அறைக்குள்ளே மங்கிய வெளிச்சம். நண்பர் ஒரு கட்டிலிலே கைகால்களை நீட்டிக்கொண்டு படுத்திருக்கிறார். நான் தலைக்குப் பக்கத்தில் பின்புறமாக அமர்ந்திருக்கிறேன்.

"இப்பொழுது நீங்கள் கண்ட கனவில் சில அம்சங்களைப் பற்றித் தனித் தனியாக உங்களிடம் சொல்லப் போகிறேன். ஒவ்வொன்றையும் கேட்டதும் அதைப் பற்றியே சிந்திக்கவேண்டும். அதன் காரணமாக மனத்தில் என்ன என்ன தோன்றுகின்றனவோ அவற்றை யெல்லாம் அப்படியே சொல்லிக் கொண்டிருங்கள். எதையும் ஒளிக்கக் கூடாது. உம்முடைய அறிவைக்கொண்டு எதையும் ஆராய்ந்து பார்க்கலாகாது. தோன்றியது தோன்றியபடியே கூறவேண்டும். எண்ணங்கள் மிக இழிந்தவைகளாக இருந்தாலும் அவற்றை மறைக்க முயல வேண்டாம்.

எவ்லாவற்றையும் தாராளமாகச் சொல்ல வேண்டும். அவற்றைக் கொண்டுதான் உண்மையைக் காணலாம்'' என்று இவ்வாறு கூறிவிட்டுக் கனவின் அம்சங்களை ஒவ்வொன்ருகக் கூறினேன். அவற்றைக் கேட்டு, ப. சொன்ன எண்ணங்களையும் கீழே தருகிறேன்.

1. பாம்புப் புற்று:—''எங்கும் பாம்புப் புற்றுகள். அவற்றைப் பார்த்துக் கொண்டே நடக்கிறேன்—சிறு வயதில் பாம்புப் புற்றுக்குப் பூசை செய்வதைப் பார்த்தல்—இரவில் நடக்கும்போது பாம்பிருக்குமோ என்று பயம்—வழியிலே ஒரு பாம்புச் சட்டை—பாம்பிருக்குமோ எனப் பயம்—ஒரு நாள் இரவிலே வீட்டிற்குத் தனியாக வருதல். பாம்பு வீட்டிற்குள்ளே இருந்தால், இருட்டிலே என்ன செய்வது?—தீக்குச்சியை உரைத்துக் கொண்டே உள்ளே செல்ல வேண்டும். முன்பு குமாஸ்தாவாக இருந்தபோது எனது அறையிலே ஒரு நாள் சர சரவென்று சப்தம்—வெளியே போய்விடுகிறேன்—திரும்பி வந்து பார்த்தபோது பாம்பு—மற்றவர்கள் வந்து அதை அடிக்கிருர்கள். நிலாவைப் பாம்பு விழுங்குவதாகச் சிறு வயதில் கேட்ட கதை.

2. ஓணன் பாம்புப் புற்றில் நுழைதல்:—ஓணன் அடிக்கடி என் கண்ணில் படுகிறது—சிறு வயதில் எனது நண்பர்கள் இருவருடன் விளையாடுதல்—அவர்கள் உண்டைவில்லால் ஓணன் அடித்தல்—ஓணனைக் கண்டு பயம்—அடிக்கவேண்டாமென்று நான் கண்டிப்பதுண்டு—ஓணனைப் பார்த்தால் உடம்பு சிலிர்ப்பதுண்டு—அதன் உருவத்தில் ஒரு அருவருப்பு—அது கடித்தால் இறந்து விடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்—நான் குமாஸ்தாவாக இருந்தபோது ஒருநாள் என் அறையில் ஒரு ஓணன் புகுந்து கொண்டது—வெளியே துரத்த முடியவில்லை.''

3. பாம்பு ஓணானைத் துரத்தல்:—"இரவில் செல்லும்போது செடிகளைக் கண்டால் எட்டத் தள்ளிச் செல்வேன்—கனவு கண்ட மறுநாள் ஒரு ஓணான் என் பின்னால் விழுந்து ஓடிற்று. அது மேலே விழுந்திருந்தால் கடிக்குமோ என்று சந்தேகம்—பாம்பு வளைந்து வளைந்து போகும்—நேராக ஓடினால் தப்பித்துக் கொள்ளலாம்."

4. பாம்பு ஓணானை வாயில் கவ்வுதல்:—யாரோ இருவர் ஒரு மலைப் பாம்பை ஒரு கம்பில் கட்டித் தூக்கி வந்ததைச் சிறு வயதில் பார்த்த ஞாபகம்—மலை ஏறும் போது பாம்பு வருமோ என்று பயம்—சிறு வயதில் திண்ணையில் படுத்திருந்தபோது கூரையில் ஏதோ ஒன்று அசைவதைக் கண்டு தாயைக் கூப்பிடுதல்—பார்த்தால் அது பாம்பு—அதை அடித்தார்கள்—மலைப் பாம்பு ஆடுமாடுகளை விழுங்குதல்—பாம்பின் வாலைப் பிடித்துச் சுற்றி அடித்தால் அது செத்துவிடும். ஓரூர் சென்று வரும்போது இருட்டிவிட்டது. வழியில் பாம்பிருக்குமோ எனப் பயம். பாம்பு வழியில் படுத்திருந்தது. காலடிச் சத்தம் கேட்டு அது போய் விட்டது. புது வீட்டில் ஏழெட்டுத் தேளிருந்தன. பாம்பும் வந்தால் என்ன செய்வதென்று பயம். சிறு வயதில் தாயுடன் படுத்திருந்தபோது படுக்கையடியில் ஒரு பாம்பு இருந்தது. அதைக் கண்டு தாய் அலறி நடுங்குதல்."

எனது நண்பருக்கு இப்பொழுது கல்யாணமாகி யிருக்கிறது. புது வீட்டில் தனிக் குடித்தனம் நடத்துகிறார். அந்த வீட்டிற்கு எதிராக ஒரு கழனி யிருக்கிறது. பாம்பு அங்கே இருக்கலாமெனச் சந்தேகம். மேலும் அவர் சில சமயங்களில் இருட்டிய பிறகு காட்டுப் பாதை வழியாக வீட்டிற்கு வரவேண்டி யிருக்கிறது. அதனால் பாம்பைப் பற்றிய பயம் உள்ளத்திலே மேலெழுந்திருக்கிறது. சிறு வயதிலே வீட்டுக் கூரையின் மீதும், படுக்கைக்குக் கீழும் பாம்பைக் கண்டதும், குமாஸ்தாவாக இருந்த காலத்தில்

அறைக்குள்ளே பாம்பைக் கண்டதும் பாம்பைப் பற்றிய பயத்தை மறைமனத்தில் உண்டாக்கியிருக்கின்றன. இன்று பாம்பைப் பற்றிய எண்ணம் ஏற்படவே பழைய உணர்ச்சியானது மனத்தில் தோன்றியிருக்கிறது.

மேலும் தம் மனத்திலே உண்டாகும் பாம்பைப் பற்றிய பயத்திற்காக அவர் தம்மைத் தாமே வெறுத்துக் கொள்ளுகிறார். அதனால் சிறு வயதிலிருந்து அருவருத்து வந்த ஓணுகைத் தம்மையே கனவில் காண்கிறார். பாம்பை அடித்து வெற்றிகொள்ள வேண்டுமென்ற ஆசையும் அதில் காண்கிறது. இவ்விளக்கத்தைக் கூறியபோது நண்பர் அதைப் பெரும்பாலும் ஒப்புக் கொண்டார். வேறொரு ஊரில் இருந்த காலத்தில் பாம்புக் கனவே கண்டதில்லை யென்றும் கூறினார். சிறு வயதில் ஏற்பட்ட அனுபவம் இதுவரை ஞாபகத்திற்கு வந்ததில்லை என்றும் சொல்லி அதிசயப்பட்டார்.

எண்ணச் சேர்க்கை முறையைக் கையாண்டு நல்ல பலன் கண்டவர் சிக்மண்ட் பிராய்டு. ஆசை நிறைவேற்றத்திற்காகவே கனவுகள் எழுகின்றனவென்று அவர் கூறுகிறார். அவருடைய ஆராய்ச்சியைப் பெரிதும் போற்றினாலும் ஆட்லரும் யுங்கும் அவர் கூறுவதைப் பூரணமாக ஏற்றுக் கொள்வதில்லை. "கனவு என்ற வாயிலின் வழியாக மனக் கோட்டைக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளின் இலேசான காட்சி நமக்குக் கிடைக்கிறது" என்று ஆட்லர் எழுதுகிறார். "ஒருவனுடைய வாழ்க்கைப் பிரச்சினையையே கனவு பிரதிபலிக்கிறது" என்பது அவர் கருத்து.

உயர்வடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் வாழ்க்கைப் போராட்டம் நிகழ்வதாக ஆட்லர் நம்புகிறார். 'கனவும் அந்நோக்கத்தை அடையும் முயற்சியைச் சித்திரிக்கிறது.'

யுங் என்பவர் மறை மனத்திற்கு மற்றவர்களைவிட மிக முக்கிய ஸ்தானம் கொடுப்பவர். மனிதவர்க்கம் அடைந்துள்ள ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சிகளெல்லாம் மறை மனத்தில் பதிந்திருக்கின்றன என்பதும் அம்மறை மனத்திலிருந்தே வெளிமனம் வளர்கிறதென்பதும் அவர் கருத்து. ஆகவே அவர், "வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் குறைபாடுகள் முதலியவற்றிற்கு மறை மனம் கனவிலே ஈடு செய்ய முயல்கிறது. அவ்வாறு ஈடு செய்வதற்காக உண்டாகும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் புதிர்போல இருக்கின்றன. அவற்றைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும்" என்று கூறுகிறார்.

பிராய்டு, ஆட்லர், யுங் ஆகிய மூவருடைய கருத்துக்களையும் சேர்த்துப் பார்க்கும்போது அநேகமாகக் கனவைப் பற்றி ஒரு பொதுவான அபிப்பிராயம் நமக்குக் கிடைக்கும்.

பல கனவுகள் தொடர்பில்லாமல் தாறுமாறாகவும், விநோதமாகவும் இருப்பதால் கனவிற்கே பொருளில்லை என்று நாம் தள்ளிவிடக் கூடாது. "கனவு நம்முடைய வாழ்க்கையோடு நெருங்கிய சம்பந்தமுடையது; அது குறிப்பாக மன நிலையைக் காட்டுகிறதென்பதை வெகு சுலபமாக நிரூபித்துவிடலாம். மறைவாக மனத்துள்ளே வேலை செய்யும் எண்ணங்களை அது காண்பிக்கிறது" என்று மெக்டூகல் என்ற மனத் தத்துவர் எழுதுகிறார்.

கனவுகள் நிகழ்கின்ற காலத்திலேயும் மனம் வேலை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் விழிப்பு நிலையிற் போல அது அவ்வளவு கூர்மையாகவும், தீவிரமாகவும் வேலை செய்வதில்லை. தர்க்கரீதியாகவும் நுட்பமாகவும் அப்பொழுது எண்ணங்கள் தோன்றுவதில்லை. இவ்வாறு மனம் தனது முழுச் சக்தியுடன் வேலை செய்யாததால் அச்சமயத்திலே மறைமனத்தில் அழுந்திக் கிடக்கும் எண்ணங்

களும் ஆசைகளும் கனவாக வெளிப்படுகின்றன. ஆதலால் தான் கனவுகளும் தாறுமாறாக இருக்கின்றன.

வாழ்க்கையில் பூர்த்தியடையாத பல ஆசைகள் கனவில் பூர்த்தியடைகின்றன என்று கண்டோம். கனவிலே ஒரு சில சமயங்களில் எதிர்காலத்தில் நடைபெறப் போவதும் தோன்றுவதுண்டு. இறந்த கால அனுபவங்களைக் கொண்டிருப்பதோடு ஓரளவிற்கு எதிர்கால அனுபவங்களின் தோற்றத்தைக் காணும் திறமையும் மனத்திற்கு உண்டு. உலகப் போக்கையும் தனி மனிதனுடைய வாழ்க்கைப் போக்கையும் கவனித்தால் அவனுடைய எதிர் காலத்தைப் பற்றிச் சற்று உணர முடியும். மேலும் மனத்துள் எழுந்துள்ள எண்ணங்களின்படியும் விருப்பங்களின்படியுமே எதிர்காலத்தில் செயல்களின் போக்கு அமைகின்றன. ஆதலால் அவை கனவில் எப்பொழுதாவது தோன்றுவதில் அற்புதமொன்றுமில்லை. இதைக்கொண்டு எல்லாக் கனவுகளும் மெய்யாகுமென்று எண்ணிவிடக் கூடாது. கனவைப் பற்றிய உண்மையை அறிந்த பின் நாம் அவ்வாறு தவறாக எண்ணமாட்டோம்.

ஒவ்வொரு கனவையும் ஆராய்ந்து அதன் பொருளை அறியலாம். அதற்கு முக்கியமாகக் கனவு காண்பவனுடைய ஒத்துழைப்பு வேண்டும். அந்தரங்கமான விஷயங்களையும் மனத்தில் உதிக்கிற எண்ணங்களையும் மறைக்காமல் கூற அவன் உடன்பட வேண்டும். இல்லாவிட்டால் உண்மையை அறிவது அநேகமாக முடியாது. அவ்வாறு வெளிப்படையாகக் கூறிய காலத்திலும் சில சமயங்களில் கனவின் பொருளை அறிய முடியாமற் போகலாம். அல்லது கனவிற்கு வேறு வகையான பொருள் கூறவும் இடமிருக்கலாம். "கனவின் பொருளைப் பூரணமாக அறிந்துவிட்டதாக யாரும் நிச்சயமாகச் சொல்ல இயலாது அதற்குக் கண்ட பொருளானது

திருப்தி யளிக்கக்கூடியதாக இருக்கின்ற காலத்திலும் அதற்கு வேறு பொருளொன்று இருக்க முடியும்" என்று பிராய்டு கூறுகிறார். ஆட்லரும் யுங்கும் இதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆதலால் கனவுகளை ஆராயும் போது இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கனவென்பது பொருளற்ற தோற்றமல்ல. மன நிலையை ஒரு விநோதமான முறையில் சித்திரிக்கும் நிகழ்ச்சி அது. அதன் உண்மையை ஆராய்ந்து கண்ட பெருமை முக்கியமாக மனப் பகுப்பியலாரையே சாரும்.

# 11. பகற் கனவு

உறங்கும்போது காண்பது கனவு. விழித்திருக்கின்ற நிலையிலும் கனவு காண்பதுண்டு. அதுதான் மனோராச்சியம் அல்லது பகற் கனவு. பகற் கனவு என்றவுடன் பகலில் உறங்கும்போது காணும் கனவு என்று கருதிவிடக் கூடாது. நன்றாக விழித்திருக்கும்போதே எழுகின்ற மனக் கோட்டைக்குத்தான் அப்பெயர் வழங்குகிறது. காலம் பகலாகவும் இருக்கலாம். இரவாகவும் இருக்கலாம். தூக் கத்தில் தோன்றினால் அது கனவு; விழிப்பில் தோன்றினால் அது பகற் கனவு.

கனவு காணாதவர்களே அநேகமாக இருக்கமாட்டார் கள். பகற் கனவு காணாதவர்களும் வெகு அருமை. மக்கள் கூட்டத்தையே இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்து விடலாம். பகற் கனவு காண்பவர் ஒரு பிரிவு; காரியம் செய்பவர் மற்றொரு பிரிவு. ஆனால் பகற் கனவு காண்பவன் காரியமே செய்யமாட்டான் என்பதில்லை. அதுபோலவே காரியம் செய்பவன் பகற் கனவு காணமாட்டான் என்ப தில்லை. மனோராச்சியத்தில் அதிக காலத்தைச் செலவிடு பவர்கள் ஒரு பகுதி; காரியம் செய்வதில் அதிக காலத்தைச் செலவிடுபவர்கள் மற்றொரு பகுதி.

பகற் கனவு வேறு; சிந்தனை வேறு. பகற் கனவு காண் பவன் தனக்கிஷ்டப்படியெல்லாம் எண்ணங்களையும் காட்சிகளையும் கற்பித்துக் கொள்ளுகிறான். ஆனால் சிந்தனை செய்பவன் அப்படியில்லை. ஒரு குறிப்பிட்ட விஷயத்திலே அவன் தன் மனத்தைத் தீவிரமாகச் செலுத்தி யோசனை செய்கிறான். மனம்போன போக்கிலே அவன் செல்லுவ தில்லை. அவன் மனத்தை எண்ண உலகில் உறுதியாக

நடக்கும்படி அறிவைக் கொண்டு தூண்டுகிறான். பகைவர்களின் கோட்டையைக் கைப்பற்ற வேண்டுமானால் சேனைத் தலைவன் அதற்காக எத்தனை ஆழ்ந்து சிந்தித்துத் திட்டம் போடவேண்டும்! எவ்வாறு தாக்கினால் எளிதில் வெற்றிபெற முடியும் என்றும், அதற்கு எத்தனை பெரிய படை பலம் வேண்டுமென்றும் அவன் யோசித்து முடிவு கட்ட வேண்டும். பல ஆயிரக்கணக்கான வீரர்களைப் பலி கொடுக்க வேண்டுமானாலும் அதற்கும் அவன் தயாராக இருக்கவேண்டும். இங்ஙனம் எண்ணிப் பார்த்து வேண்டுவனவற்றை யெல்லாம் ஆயத்தம் செய்துகொண்டு போர் தொடங்கினால்தான் அவன் வெற்றி காணமுடியும். அவ்வாறில்லாமல் தான் சுலபமாக எதிரியை வென்று கோட்டைக்குள் நுழைந்து விட்டதாகவும், புகழ்மாலை பெற்றுவிட்டதாகவும் அவன் மனோராச்சியம் செய்து கொண்டிருந்தால் குறித்த காரியம் நிறைவேறிவிடாது.

காரியவாதியும் பகற் கனவு காண்பதுண்டு. ஆனால், அவன் அத்துடன் நின்றுவிடுவதில்லை. அவன் அக்கனவை நனவாக்க முனைகிறான். உறுதியோடு காரியத்தில் ஈடுபடுகிறான். வான வெளியிலே சிறகை விரித்து வெள்ளைக் கொக்கு ஒயிலாகப் பறக்கின்றது. அதைப்பார்த்து மனிதன் தானும் பறப்பதுபோல மனோராச்சியம் செய்கிறான். ஆயிரக்கணக்கானவர்கள் அதோடு திருப்தியடைந்து விடுகிறார்கள். ஒன்றிரண்டு பேர்கள் அதை வைத்துக் கற்பனைக் கவிதைகள் வரைகிறார்கள். ஒருவன் உண்மையாகவே பறக்க முயலுகிறான். மனோராச்சியம் செய்வதால் பெற்ற விமானத்தைச் சிருஷ்டி செய்ய அவன் தனது அறிவை உபயோகித்து ஆழ்ந்து சிந்திக்கிறான். பறப்பதிலே உள்ள ரகசியத்தைக் காணப் பிரயத்தனப்படுகிறான். பல சோதனைகள் செய்கிறான். அவற்றின் விளைவாக விமானம் நமக்குக் கிடைக்கின்றது.

கனவிற்கும் பகற் கனவிற்கும் பொதுவான பல அம்சங்கள் இருக்கின்றன. அவை இரண்டும் கனவு காண்பவனையே முக்கிய கர்த்தாவாகக் கொண்டிருப்பவை. வாழ்க்கையில் நிறைவேருது மனத்தில் மறைந்து கிடக்கும் ஆசைகள் நிறைவேறுவதையே முக்கியமாக இரண்டிலும் காண்கிறோம். சில ஆசைகளும் எண்ணங்களும் இழிந்தவைகளாக இருக்கலாம். அவற்றை மனிதன் அறிவினுல் அடக்க முயலுகிருன். அதனுல் அவை மறை மனத்தில் அழுந்திக் கிடக்கின்றன. உறங்குகின்ற சமயத்தில் அறிவின் ஆதிக்கம் சற்றுத் தளர்கின்றது. அந்தச் சமயத்திலே அவைகள் கனவாக வெளியாகின்றன. அதுபோலவே பகற் கனவிலும் இவ்வாசைகள் தோன்றி மனத்திற்கு ஒரு வகையான திருப்தியை அளிக்கின்றன.

பகற் கனவைப் பற்றி ஜீ. எச். கிரீன் என்பவர் பின்வருமாறு எழுதுகிருர்:

1. நமக்குத் தெரியாமல் மனத்திலே அழுந்தி மறைந்து கிடக்கும் ஆசைகளைப் பகற் கனவு நிறைவேற்றுகின்றது.

2. ஒருவன் தன்னைப் பற்றியே உயர்வாகக் கருதுவதை அது குறிக்கின்றது.

3. உலகத்தைப் பற்றி அவன் வெளிப்படையாகக் கொண்டுள்ள நினைப்பைத் தவிர வேறொரு நினைப்பிருப்பதையும் அது குறிப்பாகக் காட்டுகிறது.

4. காரியம் செய்ய வேண்டுமென எழுகின்ற எண்ணத்திற்கும், காரியம் செய்வதற்கும் இடையே உண்டாகும் பல முக்கியமான நிகழ்ச்சிகளில் அதுவும் ஒன்ருக இருக்கலாம்.

5. தீவிர முயற்சியோடு கவனமாகக் காரியத்தில் ஈடுபட்டிருக்கும் சமயத்திலல்லாது மற்ற சமயங்களில் அது ஆதிக்கம் செலுத்தத் தொடங்குகின்றது.

இப்பகற் கனவும் சிறு வயது முதற் கொண்டே உண்டாகிறது. சிறு குழந்தைகள் விளையாடுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஒரு குழந்தை தன்னைத் தாயாகவும், ஏதாவதொரு பொருளைக் குழந்தையாகவும் பாவித்துக் கொள்ளுகிறது. தனது தாய் தன்னிடம் எவ்விதம் நடந்து கொள்ளுகிறாளோ அதுபோலவே கற்பனைக் குழந்தையிடம் அது நடக்கின்றது. தாயைப்போலவே பேசுகிறது; கடுஞ் சொல் கூறுகிறது. தண்டனை கொடுக்கிறது. அந்தக் கற்பனைக் குழந்தையிடம் தன்னிடமுள்ள குறும்புகள் எல்லாவற்றையும் இது காண்கிறது. இவ்விதமாகத் தன்னை உயர்த்தியும், தன்னிடமுள்ள குறைகளை அக் கற்பனைக் குழந்தையிடம் பாவித்தும் அது விளையாடித் திருப்தியடைகிறது.

மூன்று வயதாக இருக்கும்போது சரோஜா அடிக்கடி தனக்கே தனியாக ஒரு சொந்த வீடிருப்பதாகப் பேசுவாள். "என் வீட்டிலே நிறைய மிட்டாய் இருக்கிறது. பெரிய பீரோ இருக்கிறது" என்று என்ன என்னவோ பெருமையாகச் சொல்லிக் கொள்ளுவாள். ஒருநாள் அவள் தன் வீட்டிலே பெரிய விருந்து நடக்கிறதென்றும், வடை பாயசம் எல்லாம் ஏராளமாக இருக்கின்றனவென்றும் கூறிவிட்டு எங்களுடன் சாப்பிட வர மறுத்துவிட்டாள். அது அவளுடைய பகற் கனவைக் குறிக்கின்றது.

"குழந்தைகள் தான் அதிகமாகப் பகற் கனவு காண்பவர்கள். அவர்களுடைய பகற் கனவுகளை ஆராய்ந்து பார்த்தால் அவை பெரும்பாலும் வாழ்க்கையில் அடையப் பெறாத ஆசைகளை நிறைவேற்றுவனவாக இருக்கும்" என்று மெக்டூகல் எழுதுகிறார்.

சாதாரணமாகப் பத்தாவது வயதில் துணிகரச் செயல்களைப் பற்றிய பகற் கனவுகள் உண்டாகின்றன. பல

ருடன்கூடித் தீரச் செயல்கள் செய்வதுபோலவும், அவற்றி லெல்லாம் தானே முக்கியமாக இருப்பதுபோலவும், தனது தோழர்களுக்குத் தானே தலைவனாக விளங்குவது போலவும் காட்சிகள் தோன்றுகின்றன. காளைப் பருவத்திலே பிறக் கும் பகற் கனவுகள் பலதிறத்தினவாகும். அப்பொழுது இயல்பாகவே அதில் காதலுணர்ச்சியும் கலந்திருக்கும்.

இவ்வாறாக ஒவ்வொரு பருவத்திலும் அதற்கேற்ற வாறு பகற் கனவுகள் நிகழ்கின்றன. சிறுவர்களின் பகற் கனவுகள் பொதுவாகக் குற்றமற்றவைகளாக இருக்கும். ஏனெனில் அந்தப் பருவத்தில் அடக்கியொடுக்க வேண்டிய இழிந்த எண்ணங்கள் உண்டாகக் காரணமில்லை.

கனவுகளை ஆராய்வதுபோலவே பகற் கனவுகளையும் ஆராய்ந்தால் ஒருவனுடைய மன நிலைமையை அறிந்து கொள்ள முடியும். பகற் கனவிலே அவனுடைய ஆசை களும் எண்ணங்களும் பொதுவாக நேரிடையாகவே வெளிப்படுகின்றன. அந்த வகையில் அவனுடைய மன நிலையைக் காண இது கனவைவிட அதிகமாகப் பயன்படும். ஆனால் பகற்கனவை வெளிப்படையாகக் கூறும்படி செய்வதுதான் சிரமம். அது இழிந்ததாக இருக்குமானால் வெளியில் கூறப் பொதுவாக யாரும் விரும்பமாட்டார்கள்.

கனவின் பொருளை அறிந்துகொள்ள எண்ணச் சேர்க்கை முறையைக் கையாளுவதைப்பற்றி முன்பே கவனித்தோம். அந்த ஆராய்ச்சியோடு ஒருவன் காணும் பகற் கனவையும் சேர்த்து நோக்கினால், அவனுடைய மன நிலைமையை நன்றாக உணரமுடியும்.

# 12. கிலி

ஒரு நாள் இரவு எட்டு மணியிருக்கும். புதிதாக வந்த நண்பரொருவரோடு வெளித் திண்ணையிலமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தேன். சந்தித்துப் பல வருஷங்களாகி விட்டபடியால் அவர் குதூகலத்தோடு தமது வாழ்க்கையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் முகத்திலே மகிழ்ச்சி பொங்கிக்கொண்டிருந்தது.

அது கார் காலம். வானத்திற்குப் போர்வையிட்டது போல எங்கும் கருமேகக் கூட்டம். திடீரென்று இடியும் மின்னலும் ஆரம்பித்தன. அதுவரைக்கும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த நண்பர் இடிக் குரலைக் கேட்டு அலறி நடுங்கலானார். இடி யோசை கேட்கும் ஒவ்வொரு தடவையும் அவர் துள்ளி யெழுந்தார். மருண்டு மருண்டு பயத்தோடு சுற்றுமுற்றும் பார்த்தார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இடியிடிப்பதைக் கண்டு இவர் இப்படி பீதி கொள்ளுவானேன்; கார்காலத்திலே இடியும் மின்னலும் சகஜந்தானே? என்று நான் உள்ளுக்குள்ளேயே ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன்.

"வீட்டிற்குள்ளே போய்விடலாமா?" என்று அந்த நண்பர் அவசரமாகக் கேட்டுக்கொண்டே எழுந்து நடந்தார்.

வீட்டிற்குள்ளே சென்று அமர்ந்த பிறகும் அவர் பீதி தணியவில்லை. இடிக் குரல் கேட்கும்போதெல்லாம் அவர் திடுக்கிட்டெழுந்தார்.

"கார் காலத்திலே எங்கள் ஊரில் இப்படி இடியிடிப்பதுண்டு; ஆனால் எங்கேயாவது இடி விழுந்ததாகவே

காணோம். சும்மா வெறும் உருட்டலும் கர்ஜனையுந்தான்'' என்று மெதுவாக நான் கூறினேன்.

எனது வார்த்தைகள் அவருக்குத் தைரியமளிக்கவில்லை. அனுவசியமாகப் பயங் கொண்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். ''எனக்கென்னவோ இடியிடிப்பதைக் கேட்டால் ஒரே பயமாக இருக்கிறது'' என்று அவர் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டே வெளியிட்டார்.

அந்தப் பயத்திற்கு அவரால் ஒரு காரணமும் கூற முடியவில்லை. ''என்னவோ பயமாக இருக்கிறது'' என்று சொல்லிவிட்டுச் சுருண்டு படுத்துக்கொண்டார். விரிப்பை எடுத்துப் போர்த்துக்கொள்ளவும் செய்தார்.

''இப்படி இழுத்துப் போர்த்துக்கொண்டால் இடி விழாதோ?'' என்று கேலியாகக் கேட்டேன். அவர் பதில் பேசவேயில்லை.

இவரைப் போல வீண் பீதி யடைகின்றவர்கள் பலருண்டு. சிலருக்குப் பூனையைக் கண்டால் ஒரே பயம். சிலருக்கு இருட்டைக் கண்டால் ஒரே நடுக்கம்; கோழியைக் கண்டு அலறி ஓடுபவர்களும் உண்டு. ஏன் அவ்வாறு பயங் கொள்ளுகிறார்கள் என்று விசாரித்தால் காரணம் அவர்களுக்கே தெரியாது. சொல்ல முடியாத பெரும் பயம் ஏனோ உண்டாகிறது.

சிங்கத்தையோ புலியையோ கண்டால் பொதுவாக அனைவருக்கும் பயம் உண்டாகிறது. அவை கொடியவை என்ற காரணத்தினால் அப்பயம் ஏற்படுகிறது. அதை நாம் புரிந்துகொள்ள முடியும். அது தற்காப்பு உணர்ச்சியால் பிறக்கிறது. ஆனால் கோழியைக் கண்டாலும், மின்னலைக் கண்டாலும் உண்டாகின்ற பீதிதான் விந்தையாக இருக்கிறது. இருட்டிலே தற்காப்புணர்ச்சியினால் ஓரளவு கவனமாகச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உண்டாக

வேண்டுமே ஒழிய, பெரும் பயம் ஏற்பட வேண்டியதில்லை. இருட்டிலே சாதாரணமாகப் பலர் நடமாடுகின்றார்கள். அதனால் தீங்கு ஏற்படுவதில்லை. அவ்வாறு சாதாரணமாகப் பயமடைய வேண்டாதவற்றைக் கண்டும் காரணமின்றி ஏற்படும் பெரும் பீதியை ஒரு வகையான கிலி (Phobia) என்று மனத்தத்துவர்கள் கூறுகிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன், சாதாரணமாகச் சிறு வயதில் ஏற்பட்ட ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சிதான் இம் மாதிரியான கிலிக்குக் காரணமாக இருக்கிறது. அம் மனக் கிளர்ச்சியும், அது எதனால் உண்டானதென்பதும் மறந்து போய்விடும். ஆனால் அதன் விளைவாகத் தோன்றிய கிலி மட்டும் நிலைத்திருக்கும். என்னுடன் கல்லூரியில் படித்த ஒரு மாணவன் காற்று சற்று வேகமாக அடித்தால் கிலியடைவான். அதற்குக் காரணம் அவன் சிறுவனாக இருந்த பொழுது தனது சொந்த ஊராகிய நெல்லூரில் அடித்த பெரும் புயலையும் அதன் காரணமாக விளைந்த உயிர்ச் சேதத்தையும் கண்டு பயந்ததே என்று பின்னால் தெரிந்து கொண்டேன். இது போலவே ஒவ்வொரு வகையான கிலிக்கும் ஏதாவது காரணமிருக்கும். இயல்பாக எழுகின்ற ஆசைகள் நிறைவேறாமல் போவதாலும், அடிப்படையான உள்ளக் கிளர்ச்சிகளிலே தடுமாற்ற மேற்படுவதாலும் கிலி பிறப்பதுண்டு.

எனது மாணவன் ஒருவனுக்கு சுமார் 12 வயதிருக்கும். அவன் இருட்டறைக்குள் செல்லவே மாட்டான். அவனைக் கேலி செய்ய வேண்டுமெனச் சில மாணவர்கள் ஒரு நாள் சூழ்ச்சி செய்தார்கள். ஒரு அறைக்குள்ளே போய் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வரும்படி அவனை ஏவினார்கள். அவன் உள்ளே சென்றதும் மின்சார விளக்கைச் சட்டென்று அணைத்துவிட்டார்கள். அவன் வீரிட்டு அலறிக் கொண்டு வெளியே ஓடி வந்தான். எல்லோருக்கும் அது

விளையாட்டாக இருந்தாலும் அவனுக்கு அது ஒரு பெரும் பீதியாக இருந்தது. பிறகு அவனை நிதானமாக ஆராய்ந்து பார்த்ததில் குழந்தையாக இருந்தபோது இருட்டறையில் பிசாசிருப்பதாக யாரோ கூறிப் பயமுறுத்தியதுதான் அக் கிலிக்குக் காரணமென்று தெரிய வந்தது.

பிராணிகளைக் கண்டு ஏற்படும் கிலிக்கு சிக்மண்ட் பிராய்டு வேறொரு காரணமும் கூறுகிறார். பெற்றோரிடமுள்ள பய உணர்ச்சியானது மிருகங்களிடம் கிலியாக மாறுகிறதாம். "மிருகங்களைக் கண்டு பிறக்கும் கிலிகளில் பலவற்றை ஆராய்ந்தபோது அவை பெற்றோரிடமுள்ள பயத்தால் பிறந்தவை எனத் தெரிய வந்தது" என அவர் கூறுகிறார்.

பொதுவாக நோக்கும்போது சந்தர்ப்பத்திற்கும் அனுபவத்திற்கும் ஏற்றவாறு பலவகையான கிலிகள் பிடிக்கின்றன. மூடப்பட்டுள்ள இடத்தைக் கண்டு கிலி, திறந்த வெளியில் கிலி, செங்குத்தான இடக்கிலி, நெருப்புக் கிலி, இருட்டுக் கிலி, தூசு பட்டு நோய் பிடிக்கும் எனக்கிலி, பூனைக்கிலி, பயத்தைப்பற்றிய கிலி எனச் சாதாரணமாகப் பல கிலிகளால் மக்கள் வருந்துவதை நாம் காணலாம். அவசரமும், மன அதிர்ச்சிகளும் நிறைந்த இக்கால வாழ்க்கையிலே பலர் பலவகைப்பட்ட கிலிகளால் பீடிக்கப் பட்டிருக்கின்றனர்.

அவ்வாறு கிலி பிடித்து இடர்ப்படுவது முட்டாள் தனம் என்று போதிப்பதாலும் அக் கிலிக்கு ஒரு காரணமும் இல்லையென்று எடுத்துக் காட்டுவதாலும் அதைப் போக்கிவிட முடியாது. இருட்டறையைக் கண்டு கிலி அடைபவனை அதற்குள்ளேயே வலுக்கட்டாயமாக இருக்கச் செய்து அதில் ஒரு ஆபத்தும் இல்லையெனக் காண்பித்து அக் கிலியைப் போக்கலாமெனச் சிலர் முயலுகிறார்கள். அவ்வாறு செய்வதால் கிலி மறைவதே இல்லை.

அக்கிலியைப் போக்குவதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. சாதாரணமாகக் கிலி பிடிப்பதற்கு இளமையில் ஏற்பட்ட ஏதாவது ஒரு சம்பவமோ அனுபவமோ காரணமாக இருக்கு மென்று முன்பே கூறினேன். அச்சம்பவத்தையும் நிலைமை யையும், அனுபவத்தையும் மறுபடியும் ஞாபகத்திற்குக் கொண்டு வரும்படி செய்யவேண்டும். மறை மனத்திலே அவை அழுந்திக் கிடக்கும். அனுபவம் வாய்ந்த மனத் தத்து வரின் உதவியால் அவற்றை மனத்திற்குக் கொண்டு வந்து விடலாம். அவ்வாறு கொண்டு வந்து அன்றடைந்த உள்ளக் கிளர்ச்சியைத் திரும்பவும் உணரும்படி செய்து விட்டால் அக்கிலி தானுகவே நீங்கிவிடும். கிலியென்பது காரண மின்றி ஏற்படும் பெரும் பயம். பொதுவாக அது ஒரு ஆழ்ந்த உள்ளக்கிளர்ச்சியால் உண்டாவது. அதைப் போக் குவதற்கு மன நோய் வல்லுனர்களே தகுதி வாய்ந்தவர்கள்.

# 13. கற்றுக் கொடுத்தது யார்?

இப்பொழுதுதான் பிறந்த கன்றுக் குட்டி மெதுவாக முயன்று எழுந்து நிற்கிறது. தாயின் மடியருகே சென்று பால் குடிக்கத் தொடங்குகிறது. மடியிலே வாயை வைத்துப் பால் குடிக்க அதற்கு யார் கற்றுக் கொடுத்தார்கள்?

வாத்துக் குஞ்சு முட்டையினின்றும் வெளி வருகிறது; தண்ணீரைக் கண்டதும் அதில் தாராளமாக இறங்கி நீந்துகிறது. அதற்கு யார் நீந்தக் கற்றுக்கொடுத்தார்கள்?

குளவி ஒன்று பருவம் அடையும்போது கூடுகட்ட ஆரம்பிக்கிறது. அதில் ஒரு பக்கத்திலே முட்டையிடுகிறது. புழுவொன்றைப் பிடித்து வந்து கூட்டிலே வைக்கிறது. புழுவைத் தன் கொடுக்கால் கொட்டி அது ஸ்மரணையற்று ஆனால் உயிரோடு கிடக்கும்படி செய்கிறது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளி வந்த பிறகு அவற்றிற்கு உணவாகப் பக்கத்திலேயே இப்படிப் புழுவை வைத்துக் கூட்டை மூடிவிட்டு வெளியே போய் இறந்துவிடுகிறது. அந்தக் குளவிக் குஞ்சுகள் பெரிதாகும்போது அவைகளும் இதேமாதிரி செய்கின்றன. அவற்றிற்கு யார் கற்றுக் கொடுத்தார்கள்? கற்றுக்கொடுக்கத் தாய்க் குளவிகூட இல்லையே? பிறகு எப்படி அந்தக் குஞ்சுகளும் தாய் செய்தது போலவே காரியம் செய்கிறது?

இம்மாதிரியான கற்றுத் தெரிந்துகொள்ளாத செய்கைகளைச் செய்யும்படி தூண்டும் பிறவிச் சக்தி ஒன்றிருக்கிறது. அதற்குத்தான் இயல்பூக்கம் (Instinct) என்று பெயர்.

உணவு தேடூக்கம், கூடிவாழூக்கம், இடம்பெயரூக்கம், கலவியூக்கம் என்றிப்படிப் பல இயல்பூக்கங்கள் இருப்ப தாக மெக்டூகல் போன்ற மனத் தத்துவர்கள் குறிப்பிடு கிறார்கள். ஒவ்வொரு இயல்பூக்கத்திற்கும் ஏற்றவாறு உள்ளக் கிளர்ச்சிகளும் உண்டு என்று கூறுவர்.

இயல்பூக்கத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக் களுண்டு. இயல்பூக்கம் என்பதே இல்லை என்பாருமுண்டு. இயல்பூக்கம் இருந்தாலும் பூச்சிகள், பறவைகள், விலங்கு கள் முதலியவற்றிடம் அதன் ஆதிக்கத்தைக் காணலாம்; மனிதனிடத்திலே அதற்கு ஆதிக்கமில்லை என்று கூறுகிற வர்களும் உண்டு.

இயல்பூக்கமே இல்லையென்று மறுக்கிறவர்கள் தமது ஆராய்ச்சிகளினால் இயல்பூக்கச் செயலாக எண்ணிவந்த சில செயல்களின் காரணத்தைக் கண்டுபிடித்து அச் செயல்கள் சாதாரணமான அனுபவத்தால் அல்லது அறிவினால் ஏற்பட்ட நடத்தை என்று கூறுகிறார்கள்.

கும்மென்று இருண்டு கிடக்கும் குகையினுள்ளே வௌவால் தாராளமாகப் பறந்து வட்டமிடுகிறது. நீட்டிக் கொண்டிருக்கும் கரடுமுரடான கற்களின் மேலே அது மோதிக்கொள்வதே கிடையாது. ஒரு வேளை இருட் டிலே அதற்குக் கண் நன்றாகத் தெரியுமோ என்று சந்தே கித்து அதன் கண்களை மூடிக் கட்டிப் பறக்கவிட்டார்கள். அப்பொழுதும் அது எதன் மேலும் மோதிக்கொள்ளாமல் இருண்ட குகைக்குள்ளே தாராளமாக வட்டமிடுகின்றது! இதை இயல்பூக்கச் செயல் என்று முதலில் நம்பிக்கொண் டிருந்தார்கள். 1940-ஆம் ஆண்டிலே டொனால்டுகிரிப்பின், ராபர்ட் கலம்பாஸ் என்ற இரண்டு உயிரியலறிஞர்கள் இந்த அற்புதச் செயலின் உண்மையைக் கண்டு பிடித்தார் கள். கண்களை மூடிவிட்டாலும் இருட்டறையிலே வௌவால் எதன் மேலும் மோதிக்கொள்ளாமல் பறக் கிறது. ஆனால் அதன் காதுகளை மூடிவிட்டால் கண்கள்

திறந்திருந்தாலும் அது இருட்டில் பறக்கும்போது பல இடங்களில் மோதிக் கொள்கிறது! இந்த ஆராய்ச்சியிலிருந்து ஒரு உண்மை தெரிய வந்தது. வௌவாலுக்கு நுட்பமான ஒலியைக் கேட்டு அறிந்துகொள்ளும் சக்தியுண்டு. அதனால் அது பறக்கும்போது உண்டாகும் நுட்ப ஒலிகள் எதிரிலுள்ள தடைகளின் மேல் பட்டு திரும்பிப் பிரதிபலித்து வரும்போது அவற்றைச் சற்று தூரத்திலேயே உணர்ந்து தடைகளை விட்டு விலகித் தப்பிச் செல்கின்றது. இங்கே இயல்பூக்கச் செயல் ஒன்றும் இல்லை என்று அவர்கள் கண்டார்கள்.

ஆனால் எல்லா இயல்பூக்கங்களையும் இவ்வாறு ஆராய்ந்து அவற்றிற்குக் காரணங் கூறுவது கடினம். அத்தனை பெரிய ஆராய்ச்சியிலே நாம் ஈடுபட வேண்டியதுமில்லை. இயல்பூக்கங்களைப் பற்றிப் பொதுவாகத் தெரிந்து கொள்வதோடு அவை மனிதனுடைய செயல்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் தெரிந்துகொண்டால் போதும்.

இயல்பூக்கம் என்பது முன் அனுபவம் இல்லாமல் இயல்பாகவே செய்யப்படும் காரியமாகும். கன்றுக்குப் பாலூட்ட முன்னால் தெரியாது. இயல்பூக்கமாகக் கன்று அதைச் செய்கிறது. யாரும் கற்றுக்கொடுக்காமல் குளவி கூடுகட்டி அதில் புழுவை வைத்து முட்டையிடுகின்றது. இவ்வாறு ஒரு ஜீவராசியின் நலத்திற்கும், அதன் வருக்கத்தை அழிந்து போகாமல் பாதுகாப்பதற்கும் இயல்பூக்கச் செயல் உதவுகிறது. ஒரே வருக்கத்தைச் சேர்ந்த எல்லா ஜீவராசிகளும் ஒரே மாதிரி இயல்பூக்கச் செயல்களைக் கொண்டிருக்கிறது. ஒரு தூக்கணங்குருவி கூடு கட்டுவது போலவே மற்ற தூக்கணங் குருவிகளும் கூடு கட்டுகின்றன. இயல்பூக்கத்தின் மற்றொரு தன்மை என்னவென்றால் அனுபவத்தால் பழக்கத்திற்கு வரும் செயல்களுக்கு அது முதலில் தூண்டுகோலாக இருக்கிறது.

விலங்குகள் இயல்பூக்க நிலையிலே பல காரியங்கள் செய்கின்றன. மனிதனும் குழந்தைப் பருவத்தில் அவ்வாறே செய்கிறான். ஆனால் அவன் முதிர்ச்சியடைய அடைய அறிவாலும் அனுபவத்தாலும் இயல்பூக்கச் செயல்கள் மாறுதலடைகின்றன. சிந்தனையால் மாறுதலடையாத இயல்பூக்கச் செயல்களும் குறைந்துவிடும்.

கலவி யூக்கம் மிக வலிமை யுடையதுதான். ஆனால் மனிதன் விலங்குபோல நடந்துகொள்ளலாமா? அந்த இயல்பூக்கம் மனிதனிடத்தே தொழிற்படும்போது அதிலே ஒரு முறை இருக்க வேண்டும். அதை அவன் மீறினால் சமூகத்தால் ஒதுக்கப் படுவான்.

இயல்பூக்கங்களை ஒடுக்கி அழிப்பதென்பது இயலாத காரியம். ஆனால் விரும்பத்தகாத இயல்பூக்கங்களை வேறு நல்ல துறைகளில் செல்லும்படியாக மாற்றிவிடலாம்.

எப்படி மாற்றுவது? அது முடியுமா? முடியும். ஓர் எளிய உதாரணம் தருகிறேன். போரிடும் இயல்பூக்கத்தால் உந்தப்பட்டு ஒருவன் தனது தோழர்களுடனேயே சண்டையிடலாம். அதை மாற்றித் தனது தேசத்திற்காக அவன் போரிட முன்வரலாம். மரத்தைப் பிடுங்கி மனிதனை மோதக்கூடிய ஆற்றலுடையது யானை. ஆனால் அந்த யானையைப் பழக்கி விட்டோமானால் அது தன் பலத்தை மனிதனுக்கு உதவியாகப் பல தொழில்கள் செய்யப் பயன் படுத்தும். பெரிய பெரிய மரங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்ல உதவும்.

இவ்வாறு இயல்பூக்கத்தை மாற்றி விடுவதற்கு உயர் மடை மாற்றம் (Sublimation) என்று பெயர்.

இயல்பூக்கத்தோடு தொடர்புடைய உள்ளக் கிளர்ச்சிகளைப்பற்றி அடுத்த பகுதியில் விவரிக்கும்போது இந்த உயர் முடைமாற்றத்தைப் பற்றி மேலும் ஆராய்வோம்.

# 14. உள்ளக் கிளர்ச்சி

மனம் என்பது ஒரு மாயமாக இருந்தாலும் அதில் எத்தனை எத்தனை குமுறல்கள், கொந்தளிப்புகள், கிளர்ச்சிகள் தோன்றுகின்றன! கோபம் பிறக்கிறது, பயம் உண்டாகிறது—இப்படி எத்தனை விதமான அனுபவங்கள்! கோபம், பயம், காதல், காமம், துக்கம், வெறுப்பு முதலியவைகளுக்கு உள்ளக் கிளர்ச்சிகள் என்று பெயர்.

விசனத்தால் குழந்தை அழுகிறது; அடுத்த விநாடியிலே மகிழ்ச்சியால் சிரிக்கிறது. குழந்தைகள் தங்கள் உள்ளக் கிளர்ச்சிகளை உடனே வெளிப்படுத்திவிடுகின்றன. விரைவிலே அவை மறைந்தும் போகின்றன.

சரோஜா ஓடிவருகிறாள். "அம்மா, அடுத்த வீட்டுக் கிட்டுவுக்கு மிட்டாய் கொடுக்க வேண்டாம்" என்று அவன் மேலே வெறுப்போடு பேசுகிறாள். ஆனால் சிறிது நேரத்திற்குள்ளே இரண்டு பேரும் சேர்ந்து விளையாடத் தொடங்கி விடுகிறார்கள். சரோஜா தன்னிடமிருந்த மிட்டாயை அவனுக்குக் கொடுக்கிறாள். கிட்டுவின் மேல் ஏற்பட்டிருந்த வெறுப்பை அவள் மறந்தே விடுகிறாள்.

இந்தக் குழந்தைகளைப் போல உலக மக்கள் இருக்கக் கூடாதா என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது.

ஆனால் மனிதன் தனது உள்ளக் கிளர்ச்சிகள் அனைத்தையும் குழந்தைகளைப் போலத் திடீர் திடீரென்று உடனே வெளிப்படுத்தலாமா? சமூக வாழ்க்கையிலே அது சரிப்படுமா?

அவசரமாக ஒருவன் ரெயில் வண்டிக்குள்ளே நுழைகிறான். செருப்புக் காலால் உனது கால் விரலை நன்றாக

மிதித்துவிடுகிறான். வலி பொறுக்க முடியாமல் உனக்குக் கோபம் பொங்கி வருகிறது. வந்தவன் கன்னத்திலே அறையலாம் என்று ஆத்திரம் பிறக்கிறது. உடனே அடித்துவிடலாமா? அல்லது வாயில் வந்தபடியெல்லாம் அவனைப் பேசத்தான் செய்யலாமா?

ஒரு தேசம் மற்றொரு தேசத்திற்கு ஏதோ ஒரு தவறான காரியம் செய்துவிடுகிறது. அதற்காக உடனே போர் தொடுத்துவிடலாமா?

காமம் குரோதம் பொறாமை இப்படி எத்தனையோ உள்ளக் கிளர்ச்சிகள் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் ஆட்சி அதிகாரம் கிடைத்துவிட்டால் சமூக வாழ்க்கையே நிலை குலைந்து போகும்போலத் தோன்றுகிறது.

மனிதன் தனது உள்ளக் கிளர்ச்சிகள் பலவற்றைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவன் விலங்குகளைப் போல நடக்க முடியாது. சில விலங்குகள்கூட ஓரளவு தமது உள்ளக் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொள்ளுகின்றன என்று தோன்றுகிறது. மனிதன் அவற்றைவிடத் தாழ்வாக நடக்க முடியாது. அவனுடைய நாகரிகம், அவனுடைய பண்பாடு அவற்றின் பெருமையெல்லாம் அழியாதிருக்க வேண்டுமானால்,சமூக வாழ்க்கை நிலைக்க வேண்டுமானால் மனிதன் தனது இழிந்த கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

இயல்பூக்கங்களை அடக்கி அழித்துவிட முடியாது என்று கண்டோம். இயல்பூக்கங்களுடன் சேர்ந்து பல உள்ளக் கிளர்ச்சிகள் தோன்றுகின்றன. ஆகவே உள்ளக் கிளர்ச்சிகளையும் அடியோடு அழித்துவிட முடியாது. அப்படி முயலும்போதுதான் மறை மனக் கோளாறுகள் பல உண்டாகின்றன என்று கூறுகிறார்கள்.

ஆனால் இழிந்த உள்ளக் கிளர்ச்சிகளையும், இயல்பூக்கங்களையும் வேறு நல்ல வகையில் திருப்பிவிட்டு உயர்மடை மாற்றம் செய்யலாம். காம இச்சையை அடக்க முயலும் ஒருவன் அவன் பக்தனாக இருந்தால் அதைக் கடவுளிடத்தே உயர்ந்த பக்தியாக மாறச் செய்கிறான்; அல்லது ஜீவராசிகளிடத்தே அளவு கடந்த அன்பாக மாற்றி அவற்றின் சேவையிலே ஈடுபடுகிறான். அவன் கலைஞனாக இருந்தால் அழகிய கலைச் சிருஷ்டியிலே அதை மாற்றுகிறான்.

இச்சைகள் நிறைவேறாத காலத்தில் இப்படிப்பட்ட மடை மாற்றமும் இல்லாவிட்டால்தான் மனக் கோளாறுகள் ஏற்பட அவை காரணமாகின்றன.

மறிவினையாக மனிதன் சில காரியங்களைச் செய்கிறான். மறிவினை (Reflex action) என்பது ஒரு புதிய சொல். ஆனால் அதைப் புரிந்து கொள்வது சிரமமல்ல.

ரெயிலிலே பிரயாணம் செய்யும்போது கரித்தூளொன்று கண்ணிலே விழுகிறது. கண் உடனே மூடிக்கொள்கிறது; கண்ணீர் மளமள வென்று வருகிறது; அப்படி வந்து கண்ணுக்கு ஏற்பட்டுள்ள தொந்தரவைத் தவிர்க்க முயல்கிறது.

கண் மூடுவதும், கண்ணீர் பெருகுவதும் நாம் நினைத்துப் பார்த்துச் செய்த காரியங்கள் அல்ல. அவை தாமாகவே நிகழ்கின்றன. அப்படிப்பட்ட செயல்களுக்குத் தான் மறிவினைகள் என்று பெயர். தும்முதல், குறட்டை விடுதல் போன்ற காரியங்களெல்லாம் மறிவினைகளே.

இயல்பூக்கத்தாலும், உள்ளக் கிளர்ச்சியாலும் மனிதன் பல செயல்களில் ஈடுபடுகின்றான். அறிவைக் கொண்டு எண்ணித் துணிந்து பல செயல்கள் செய்கின்றான். பழக்கத்தின் வலிமையால் சில செயல்களைச் சிந்தனையின் தூண்டுதலில்லாது இயல்பாகவே செய்யவும் கற்றுக்

கொள்ளுகிருன். "காலையில் படுக்கையிலிருந்து எழுந்தது முதல் இரவில் படுக்கப் போகும்வரை செய்யும் பல செயல்கள் பழக்கத்தின் பயனுக இயல்பாகவே நடைபெறுகின்றன. உண்பது, ஆடை அணிவது, நண்பர்களை வரவேற்றுப் பேசுவது—எல்லாம் பல நாட்களில் ஏற்பட்ட பழக்கத்திஞல் மனத்தின் தூண்டுதலில்லாமல் ஒழுங்காக அமைகின்றன" என்று வில்லியம் ஜேம்ஸ் என்ற மனத்தத்துவர் கூறுகிருர்.

பழக்கத்திஞல் செய்யும் வினைக்கும் மறிவினைக்கும் வேறுபாடு உண்டு. பழக்கத்திஞல் செய்யும் வினையை முதலில் தொடங்கும்போது மனத்தின் தூண்டுதலால் அதன் துணிவுப்படி செய்தோம். பிறகு பல தடவை அவ்வாறே எண்ணிச் செய்ததால் அது இயல்பான பழக்கமாக நாளடைவில் ஆகிவிடுகிறது. அந்த நிலையில் மனத்தின் தூண்டுதல் அவசியமில்லை யென்றே கூறலாம். இவ்வாறு பல சாதாரணக் காரியங்களைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்துவிடுவதால் மனத்திற்கு வேறு உயர்ந்த செயல்களைப் பற்றி எண்ணித் துணிய அவகாசமும் சக்தியும் கிடைக்கும்.

பழக்கத்தின் வலிமையாலே இயல்பாகவே பல காரியங்களைச் செய்துவிடலாம் என்பதஞல் பழக்கத்தை உண்டு பண்ணிக்கொள்வதில் மிகுந்த எச்சரிக்கை வேண்டும். நல்ல பழக்கங்களை ஆரம்பத்திலிருந்தே ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் நமது பழக்கங்களே நமக்குத் தீமையாக முடிந்துவிடும்.

ஆகவே மனிதன் இயல்பூக்கத்தாலும், உள்ளக் கிளர்ச்சியாலும், பழக்கத்தாலும், எண்ணித் துணிவதாலும் மிகப் பல காரியங்களைச் செய்கிருன் என்று ஏற்படுகிறது. மறிவினையாகவும் சில காரியங்களைச் செய்கிருன். சில செயல்கள் பழக்கத்தின் வலிமையால் மறிவினை போலவே அமைந்துவிடுகின்றன. ஓடும்போது கால் இடறி ஒருவன்

கீழே விழுகிருன். அவனுடைய மார்புக்கூடோ, தலையோ தரையில் மோதாதபடி கை முதலில் தரையில் ஊன்றித் தடுத்துக்கொள்ளுகிறது. கையைத் தரையில் ஊன்றி மற்ற உறுப்புக்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணி இக் காரியத்தை நாம் செய்வதில்லை. இளம் பிராயத்திலிருந்து ஏற்பட்ட பழக்கத்தின் வலிமையால் மறி வினை போலவே இது நடைபெறுகிறது. இதை 'அரை மறிவினை' என்று சிலர் சொல்வார்கள்.

மேலே கூறியவற்றிலிருந்து மனிதனுடைய செயல் களுக்கு அவனுடைய மனம் எவ்வளவு தூரம் காரணமாக இருக்கிறதென்று தெரிகிறது. மறிவினைச் செயல்களைக் கூட மனத்தின் சிந்தனை வலிமையால் ஓரளவு மாற்றி யமைக்க முடியும். மனத்தின் வலிமையால் நல்ல பழக்கங் களை ஏற்படுத்திக்கொள்ளலாம். இயல்பூக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் உயர் மடை மாற்றம் பெற்றுச் சிறப்பாக அமையச் செய்யலாம். அவ்வாறு செய்வதால் மனித னுடைய வாழ்க்கை உயர்வடைகின்றது.

# 15. ஓட்டம் முதலிலா, பயம் முதலிலா?

உள்ளக் கிளர்ச்சிகள் எத்தனை என்பது பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன்னுலெல்லாம் பெரிய பெரிய பட்டியல்கள் வெளியிடுவதுண்டு. ஒவ்வொரு கிளர்ச்சியின் தன்மையென்ன, அதனோடு தொடர்புள்ள இயல்பூக்கம் என்ன, அது பிறப்பிலிருந்தே உண்டானதா அல்லது சூழ்நிலையால் தோன்றியதா என்று இப்படியெல்லாம் ஆராய்ச்சிகள் நடைபெறும்.

நடத்தைக்கொள்கைஉளவியலைத் தோற்றுவித்த வாட்ஸன் என்பவர் பச்சைக் குழந்தைகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தியதன் பயனுக மனிதனுக்குப் பயம், கோபம், அன்பு என்ற மூன்று உள்ளக் கிளர்ச்சிகள்தான் இயல்பாகவே அமைந்திருக்கின்றன என்று கூறினுர். இவர் கூறியதைப் பொதுவாக எல்லோரும் ஆமோதித்தார்கள்.

ஆனுல் சமீபத்திலே சில மனத்தத்துவர்கள் செய்த ஆராய்ச்சியின் விளைவாக மேலே கூறியவாறு குழந்தைகளின் உள்ளக் கிளர்ச்சிகள் தெளிவாகவும் தனித் தனியாகவும் இருக்கின்றனவா என்பதில் ஐயம் தோன்றியிருக்கிறது.

குழந்தைப் பருவத்திலேயே உள்ளக் கிளர்ச்சிகள் இருக்கின்றன என்பதை மட்டும் நாம் தெரிந்துகொண்டால் போதும். அதற்கு மேற்பட்ட ஆராய்ச்சிகளை மனத்தத்துவர்களுக்கு விட்டுவிடலாம்.

உள்ளக் கிளர்ச்சிகளைப் பற்றி இன்னும் ஒரு வேடிக்கையான விவாதம் உண்டு. உள்ளக் கிளர்ச்சி

முதலில் தோன்றி அதன் விளைவாகச் செயல் நடைபெறுகிறதா அல்லது செயல் நடைபெற்று அதன் விளைவாக உள்ளக் கிளர்ச்சி தோன்றுகிறதா என்பதிலே பெரிய விவாதம் ஏற்பட்டுவிட்டது.

மனத்திலே விசனம் உண்டாகிறது; அதனால் ஒருவன் அழுகிறான் என்று நாம் சொல்லுகிறோம். அதுதான் உண்மை என்று நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம். ஆனால் வில்லியம் ஜேம்ஸ் என்ற மனத் தத்துவரும், கார்ல் லாங் என்ற உடலியல் நிபுணரும் நமது நம்பிக்கைக்கு முற்றிலும் மாறான ஒரு கருத்தைப் புதிதாக வெளியிட்டார்கள். "முதலில் மனிதன் அழுகிறான்; பிறகுதான் விசனம் என்ற உள்ளக் கிளர்ச்சி தோன்றுகிறது" என்று அவர்கள் கூறினார்கள். அதாவது உடலிலே மாறுதல்கள் ஏற்பட்ட பிறகே அவற்றிற்கேற்ற உள்ளக் கிளர்ச்சிகள் எழுகின்றன என்று அவர்கள் வாதித்தார்கள்.

இந்தக் கொள்கை உண்மையென்றும் சரியல்லவென்றும் நிரூபிக்க எத்தனையோ சோதனைகள் நடந்திருக்கின்றன.

"நீ முதலில் ஓட்டம் பிடிக்கிறாய்; பிறகுதான் பயம் தோன்றுகிறது" என்று கூறினால் சிரிக்கத்தான் தோன்றும். ஆனால் அவ்வளவு சுலபமாக இக் கொள்கையைத் தீர்த்துக் கட்டிவிட இதுவரையிலும் முடியவில்லை.

ஷெரிங்டன், கானன் என்ற இருவர் தாங்கள் செய்த ஆராய்ச்சிகளைக் கொண்டு இக்கொள்கை தவறானது என்று காட்டச் சில ஆண்டுகளுக்கு முன்னே முயன்றார்கள். ஆனால் இவர்களுடைய ஆராய்ச்சிகளைக்கொண்டு இக் கொள்கையை முடிவாக மறுக்க முடியாது என்று ஆங்கெல் என்ற மற்றொரு அறிஞர் தக்க காரணங்களுடன் விளக்கியிருக்கிறார்.

இந்த விவாதத்தின் முடிவு எப்படியானாலும் உள்ளக் கிளர்ச்சியைப் பற்றிப் பொதுவாக நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை அது பெரிதும் பாதிக்காது.

நமது உடம்பின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு வகையான சுரப்பிகள் (Glands) இருக்கின்றன. வாயில் உமிழ்நீர் சுரப்பது ஒரு வகைச் சுரப்பியால்தான். வளர்ச்சிக்கு உதவ ஒரு வகைச் சுரப்பி இருக்கிறது. இப்படிப் பல சுரப்பிகள் இருந்து பல வேலைகளைச் செய்கின்றன.

சுரப்பிகளிலே நாளமில்லாத சுரப்பிகள் சில உண்டு. அவை தம்மிடத்துச் சுரக்கும் நீரை நேராக இரத்தத்தில் கலக்கும்படி செய்கின்றன. அவைகள் உள்ளக் கிளர்ச்சிகளால் உடம்பிலும் செயலிலும் ஏற்படும் மாறுதல்களுக்குக் காரணமாக இருக்கின்றன வென்று கண்டிருக்கிறார்கள். ஆட்ரீனல் என்ற சுரப்பி சிறுநீர்ப் பைக்கு மேலே இருக்கிறது. வலி, பயம், கோபம் ஆகிய கிளர்ச்சிகளால் அந்தச் சுரப்பி பாதிக்கப்படுகிறது என்றும், செயற்கை முறையிலே அச் சுரப்பி நீரை ஒருவனுடைய இரத்தத்தில் சேரும்படி செய்தால் பயத்தால் ஏற்படும் உடல் மாறுபாடுகளெல்லாம் உண்டாகிறதென்றும் கானன் என்பார் ஆராய்ந்து கூறியிருக்கிறார். இவ்வாறே மற்ற சுரப்பிகளின் தன்மைகளை ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள்.

சுரப்பிகள் அல்லது மற்ற உடல் உறுப்புகளின் செய்கைகளால் உள்ளக்கிளர்ச்சிகள் தோன்றுவதானாலும் அல்லது உள்ளக் கிளர்ச்சிகளால் உறுப்புக்களின் செய்கைகள் மாறுபாடடைவதானாலும் மனிதனுடைய வாழ்க்கையிலே ஏற்படும் விளைவு ஒன்றுதான். இழிந்த உள்ளக் கிளர்ச்சிகளுக்கு ஆட்பட்ட மனிதன் வீழ்ச்சியடைகிறான். அவற்றிற்கு ஆட்படாமல் அவற்றை உயர்மடைமாற்றம் செய்துகொண்டவன் உயர்வடைகின்றான்

இதைத்தான் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அறிவு, பகுத்தறிவு என்றெல்லாம் நாம் பேசுகிறோம். ஆனால் உள்ளக் கிளர்ச்சிகளே ஒருவனுடைய செயல்களுக்கு முக்கிய காரணமாக இருக்கின்றன. நல்ல பழக்கங்களையும், பற்றுதல்களையும், லட்சியங்களையும் உண்டாக்கிக் கொள்வதாலும், திடசித்தத்தாலும் ஒருவன் தனது உள்ளக் கிளர்ச்சிகளை நல்வழிப் படுத்திக்கொள்ள முடியுமானால் அவன் மேம்பாடடையலாம். மனச்சாட்சியும் அறிவும் இம் முயற்சியிலே அவனுக்குத் துணையாக நிற்க வேண்டும்.

# 16. நமக்குப் பெருமை

சமீபத்திலே நான் ஒரு சினிமாக் காட்சியைப் பார்த்தேன். மறை மனத்திலே ஏற்பட்டுள்ள சிக்கலை அடிப்படையாகக் கொண்டு, அந்தப் படம் உருவாகியிருக்கிறது. உள்ளத்தைக் கவரும் கதை அது. அதிலே ஒரு கட்டத்திலே ஒன்றுக்குப் பின் ஒன்ருக எத்தனையோ கதவுகள் திறக்கப்படுவது போல ஒரு காட்சியைக் கற்பனை செய்திருக்கிருர்கள். முதலில் ஒரே கதவுதான் எதிரிலே தோன்றுகிறது. அது திறக்கிறது. உள்ளே மற்ெருரு கதவு. அது திறந்ததும் மற்ெருரு கதவு. இப்படியே கதவுகள் ஒன்றுக்குப் பின் ஒன்ருகத் தோன்றுகின்றன. அவற்றிற்கு முடிவே இல்லை போலக் காண்கிறது.

மனத்தின் பல நிலைகளையும், ஆழத்தையும் அம்மாதிரி உருவகப்படுத்தி அந்தக் காட்சியிலே காட்டியிருக்கிருர்கள். மனம் அத்தனை மாயமானது. அதன் விசித்திரச் செயல்களையெல்லாம் பொதுப்படையாக இதுவரை ஆராய்ந்தோம். மனம் என்ருல் என்ன என்று திட்டமாக எடுத்துச் சொல்ல முடியாவிட்டாலும் அதன் செயல்களை ஒருவாறு தெரிந்துகொள்ள முடிந்தது. அதன் முக்கிய அம்சங்களாகிய நனவு மனம், நனவிலி மனம், நனவடி மனம் (வெளி மனம், மறை மனம், இடை மனம்) எவ்வாறு வேலை செய்கின்றன என்றும் பார்த்தோம்.

இந்த மனத்தின் பெருமையைப் பற்றியும், மாயத்தைப்பற்றியும் எடுத்து விளக்கிக் கவிஞர்கள் கவி புனைந்திருக்கிருர்கள்; அடியார்கள் பாடியிருக்கிருர்கள். மனக்

குரங்கு என்றுகூடப் பழித்துக் கூறியிருக்கிறார்கள். தத்துவப் பெரியார்களும் சிந்தையை அடக்க முடியவில்லையே என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மனத்தினாலேயே மனிதனுக்குத் தனிப்பட்ட பெருமை ஏற்பட்டிருக்கிறது. மனம் என்பதொன்றில்லாவிட்டால் அவனுக்குப் பெருமையே இல்லையென்று கூறலாம். அதன் உதவியாலேயே அவன் எத்தனையோ ஆச்சரியமான காரியங்களையெல்லாம் சாதித்திருக்கிறான். ஆனால் அது அவனைக் குழியில் தள்ளிவிடவும் செய்யும். மறை மனத்திலே மறைந்து கிடக்கும் இச்சைகள் பகுத்தறிவையும், மனச் சாட்சியையும் ஏமாற்றிவிட்டு மேலெழுந்து ஆதிக்கம் செய்யத் தொடங்கி விடலாம். அதை உணர்ந்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நமது செயல்களையும், நோக்கங்களையும் அடிக்கடி அலசி ஆராய்ந்து மதிப்பிடப் பழகிக்கொள்ள வேண்டும். இது எளிதான காரிய மல்ல; ஏனெனில் அதற்கும் அந்த மனத்தையே நம்பவேண்டியிருக்கிறது. அதற்குத்தான் மனத்தைப் பற்றிய அறிவு அவசியமாகின்றது.

மனத்தின் தன்மைகளை உணர்ந்துகொண்டு அதைச் சரிவரப் பயன்படுத்தி நடந்தால் வாழ்க்கையிலே வெற்றியடையலாம். கனவும், பகற்கனவும் மனத்தின் தன்மைகளை அறிய உதவுகின்றன. இயல்பூக்கங்கள், உள்ளக் கிளர்ச்சிகள், ஞாபக சக்தி, கற்பனைசக்தி ஆகியவற்றின் இயல்புகள், பயன்கள் ஆகியவற்றை அறிந்துகொள்வதாலும் மனத்தின் தன்மைகள் தெளிவாகின்றன.

மனத்தைப்பற்றி இன்னும் எவ்வளவோ விரிவான ஆராய்ச்சிகள் செய்யலாம். அவற்றிற்கெல்லாம் இங்கு இடமில்லை. பொதுப்படையாக எல்லோருக்கும் தெரிய வேண்டிய அடிப்படையான சில முக்கிய விஷயங்களையே இங்கு எடுத்துக் கூற விரும்பினேன்.

பிறக்கும்போது மனம் என்று ஒன்று தனிப்படக் கிடையாது என்று சிலர் கூறுகிறார்கள். சில மறிவினைகளை மட்டும் உடையவனாக மனிதன் உலகத்திலே தோன்றுகிறான்; அனுபவங்களின் மூலமாக மனம் சிறிது சிறிதாக உருவாகிறது என்பது அவர்களுடைய வாதம்.

இக் கொள்கைக்கு எதிராக வேறொரு கொள்கையுண்டு. மனம் என்பது பல வகையான திறமைகளுடன் பிறப்பிலே இருக்கிறது என்றும் அது அநுபவத்தால் மலர்ச்சி யடைகிறது என்றும் அக் கொள்கையினர் கூறுகின்றனர்.

ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கிக் கட்டி ஒரு கட்டடம் உருவாவதுபோல மனம் உருவாகிறது என்பது ஒரு கொள்கை.

ஆலமரத்தின் சிறு விதைக்குள்ளேயே அந்தப் பெரிய மரம் முழுவதும் மறைந்திருந்து பின்னால் விகசிப்பதுபோல மனம் மலர்ச்சியடைகிறது என்பது வேறொரு கொள்கை.

ஏதாவதொரு உயிரினத்தின் மறிவினைகளெல்லாம் ஒரே மாதிரியாக அமைந்திருக்கின்றன என்று கண்டோம். மனித இனத்து மறிவினைகளும் அவ்வாறுதானிருக்கின்றன. அவ்வாறிருக்கும்போது ஒரே விதமான சூழ்நிலையில் ஒரே விதமான அநுபவங்களைப் பெறும் குழந்தைகள் வெவ்வேறு விதமாகச் செயல் புரிவதற்கும், மனப்போக்குக் கொண்டிருப்பதற்கும் காரணம் என்ன? வெவ்வேறு வகையான இயல்புகளுடன் மனம் அமைந்திராவிடில் வேறு வேறான செயல்கள் நிகழ முடியாதென்பது இக் கொள்கையாரின் முடிபாகும். பாரம்பரிய அமைப்பினால் வெவ்வேறான இயல்புகள் காணப்படுகின்றன என்றும், இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக முற்பிறவி வினைகள் நிற்கின்றன என்ற தத்துவக் கருத்தும் கூறப்படுகின்றன. பல பிறப்புக்கள் உண்டு என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களும் உண்டு.

இவ்வாறு அடிப்படைக் கருத்துக்களில் மாறுபாடுகள் இருந்தாலும் குழந்தையின் ஐந்து அல்லது ஏழு வயதிற்குள்ளாகவே அதன் பிற்கால வாழ்க்கையின் போக்கிற்கு வேண்டிய பொதுவான மன அமைப்பு ஏற்பட்டுவிடுகிறது என்பதில் அநேகமாகக் கருத்தொருமை காணப்படுகிறது. மனம் எவ்வாறு உருவாகியுள்ளது என்பதை முடிவாக நிச்சயம் செய்து கொள்ளாத நிலைமையிலும் இக் கருத்தை ஏற்றுக் கொள்வதில் தடையொன்றுமில்லை. அநுபவங்களின் மூலமும் சூழ்நிலையின் மூலமும் மனம் என்பது சிறிதுசிறிதாகச் சேர்ந்து புதிதாக உருவெடுத்தாலும் அல்லது அவற்றின் மூலமாக மனம் மலர்ச்சியடைந்தாலும் விளைவொன்றுதான். ஆதலால் மனத் தோற்றத்தைப் பற்றிய விவாதங்களில் தலையிடாமல் அதன் தன்மைகளை அறிந்துகொள்ள முயல்வது முக்கியமாகும்.

மனம் நமக்குத் தனிப் பெருமை என்று மீண்டும் கூறுகிறேன். மற்ற ஜீவராசிகளுக்கு மனம் உண்டு என்று வைத்துக்கொண்டாலும் அது மனிதனுக்குள்ள மனத்தைப்போல அத்தனை நுட்பமாகத் தொழில் செய்வதில்லை. மனிதனுடைய மனம் அத்தனை நுட்பமானது; பரிணாம ஏணியிலே ஏறி ஏறி நுண்மை பெற்றுப் பெற்று அது அபிவிருத்தியடைந்திருக்கிறது என்று கூறலாம். மனிதனுடைய மனம் ஓர் அற்புதம். அதை முற்றிலும் அறிந்துகொள்வது மிகவும் அரிது. அறிந்துகொண்ட அளவிற்கு நல்லது.

## பெ. தூரன் இயற்றிய மனத்தத்துவ நூல்கள்

# குழந்தை உள்ளம்

**'ஹிந்து' பத்திரிக்கை இந்நூலைப் பற்றிக் கூறியுள்ளதாவது:—**

*"நூல் முழுவதிலும் நல்ல கருத்துக்கள் தரப் பட்டுள்ளன; அவற்றைப் பின்பற்றினால் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வளர்வார்கள். பெற்றோர்களுக்கு இன்று மிக அவசியமாக வேண்டிய குழந்தை மனத்தத்துவத்தைப் பற்றிய அறிவைக் கொடுப்பதில் இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கிறது.*

*இந்நூல் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கத் தகுந்தது".*

**விலை ரூ. 2—4—0**

★

# பாரம்பரியம்

பெற்றோர்களின் உடலமைப்புகள், திறமைகள் குழந்தைகளுக்கு எவ்வளவு தூரம் பாரம்பரியமாக அமைகின்றன என்பதையும், எவ்வாறு அமைகின்றன என்பதையும் விளக்கும் நூல்.

**இதைப்பற்றி ஹிந்து பத்திரிக்கை கூறியுள்ளதாவது:—**

*"தற்காலத்தில் நடந்துள்ள ஆராய்ச்சிகளின் விளைவாகப் பாரம்பரியத்தைப் பற்றி தெரிந்துள்ள விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் எழுதப் பட்டிருக்கிறது. .........பாரம் பரியம் என்ற விஷயம் கடினமானதாக இருந்தாலும் அதன் எல்லா அம்சங்களைப்பற்றியும் எளிய நடையிலே அனைவரும் புரிந்து கொள்ளும்படியாக எழுதும் முயற்சியிலே இந்நூலின் ஆசிரியர் சிறப்பாக வெற்றியடைந்திருக்கிறார்".*

**விலை ரூ. 1—4—0**